

Vol.26 | No. 1 | January 2022

The Official Organ of the Diocese of Thuckalay

# இறையருள்



SILVER JUBILEE INAUGURATION, TENKASI MISSION, PULIYARAI, 19.12.2021



PRIESTS' PRE-CHRISTMAS GATHERING SANGAMAM, 21.12.2021




Pre-Christmas Gathering of the Heads of Institutions
Sangamam, 13.12.2021



St. Joseph's Year Conclusion, Thettivilai - 08.12.02021



Home for the Destitute Women (Nirmala Home) Foundation Stone,
Vijayanarayanpuram, Nanguneri - 30.12.2021

THE OFFICIAL ORGAN OF THE DIOCESE OF THUCKALAY
VOLUME 26 No :1 JANUARY 2022



# இறையருள்
# IRAIARUL

## Editorial Board

Patron
**His Excellency**
**Mar George Rajendran SDB**
Chief Editor
**Fr. Joseph Santhosh**
Executive Editor
Associate Editors
**Fr. Thomas Sathianesan**
**Mr. Edwinson**
**Mr. Aiyathurai**
**Mr. Jesin Joseph**
Published by:
**Fr. Joseph Santhosh**
**Bishop's House**
**Post Box No . 12**
**Thuckalay - 629 175**
**K.K.Dist,Tamil Nadu,India.**
Designed by:
**Jesin J Joseph**
Printed at
**Pulari Offset Press**
**Thuckalay**
**Ph:04651-252570**

## உள்ளே...

| | |
|---|---|
| Bishop's Message | 02 |
| ஆயர் சுற்றுமடல் - 1 | 05 |
| ஆயர் சுற்றுமடல் - 2 | 10 |
| மறைக்கல்வி | 14 |
| மிஷன் லீக் | 16 |
| இளையோர் இயக்கம் | 17 |
| இல்வாழ்வு இயக்கம் | 21 |
| வின்செனட்-தே-பவுல் சபை | 23 |
| KKSSS | 25 |
| மறைமாவட்ட செய்திகள் | 30 |
| மறைவட்ட செய்திகள் | 37 |
| Bishop's Engagements | 43 |

Bishop George Rajendran SDB
Diocese of Thuckalay

Mobile: +919443281100
Email: bpgeorgerajendran@gmail.com

BISHOP'S HOUSE
P.B. No. 12, Thuckalay P.O.
Kanyakumari District
Tamilnadu – 629175, India
Phone: +91-4651-250633
Diocese Email: thuckalaydiocese@yahoo.com

**Ref. No. Priests/GR/129/2021**

**31 December 2021**

**Dear Readers,**

Greetings from Bishop's House, Thuckalay!

As we enter the year 2022, I pray that the spirit of Christmas continues to linger in our hearts. The reminder of Christ's coming, his abiding presence with us and the love, joy and hope our Saviour brings are tremendous gifts for our suffering, broken and troubled world. I pray this circular finds you well and enjoying the peace that Christ brings.

The new year provides the opportunities for us to turn a new page in our history. We remember and give thanks for the blessings of the past year, despite the challenges, adversities and uncertainties that we continue to endure. Thank God for Christmas, renewing our confidence that God sent his only Begotten Son, our Saviour to bring new light and life to our world.

Amidst all the troubles and losses, we have experienced in the past year, there were also moments of joy and gladness. Our Eparchy was able to lift most restrictions for liturgical gatherings, so we could come together again as a faith family to worship, celebrate the Holy Qurbana, baptisms, weddings and other services in person. We were able to celebrate the Silver Jubilee of the establishment of our Eparchy in a solemn and fitting manner. We were able to organise many of normal programmes towards the end of last year.

Furthermore, the new year gives us the chance to look forward in hope. The Solemnity of Mary, the Mother of God, on 1 January sets the tone for our disposition as we march ahead to write a new chapter in our story. We honour and thank our Blessed Virgin Mary for giving birth to Jesus, the Emmanuel, who guides our path to eternal life. She teaches us to ponder and treasure the various moments we have enjoyed as well as the sorrows and adversities we endured. Her feast day is an ideal time to seek her loving intercession during this new year to renew faith, trust and confidence in God's love and mercy.

We pray to her as we continue to help build a culture of life and a culture of care in our society and in the world. Our pastoral care for unemployed youth, differently able children, mentally retarded persons, women in crisis or without employment, orphans, Catholics in our extended territories, other similar interventions help us to carry forward our mission.

Finally, the new year also presents us with a fresh start, new perspectives and new opportunities as well. We look forward to the coming months as parishes throughout the Eparchy, in communion with the Holy Father and the Catholic churches all over the world, join the Synod of Bishops on Synodality process underway as we all journey together to pray, listen and discern what people value in our Church, their aspirations and suggestions as to how we can do better.

Like Mary, the Mother of God, let us place our lives and the world in the hands of God. Filled with Christ's love, let us be bearers of hope during these challenging times to generously share that hope with others and help renew the hearts of our brothers and sisters. May God bless the year 2022 with his redeeming grace to bring healing, lasting joy and peace to the world.

It is gratifying to note that on the first day of the year, we celebrate the feast of Mary, Mother of God. It is indeed a wonderful opportunity for all of us to entrust ourselves to the maternal care and protection of Mary as we begin the new year 2022, which is a precious gift from God. Let us make good use of this year in order to become more Christ-like and to bring his message to as many people as possible. Let us make the invocation that recite in the prayer Our Father, Thy kingdom come, a reality

Yours in Christ Jesus,

+ George Rajendran SDB

Bishop of Thuckalay

| FEASTDAYS OF REV. FATHERS - JANUARY - 2022 | |
|---|---|
| Fr. Sanil Panthichirackal | 03 |
| Fr. Johnsilal Arackaparampil | 03 |
| Fr. Davis Karukappally CMI | 20 |
| Fr. Justin Cheruvelil | 20 |
| Fr. Mijo Puthenpurayil | 20 |
| Fr. Robin Kurumullil | 20 |
| Fr. Seby Manimalakandathil | 20 |

Bishop George Rajendran sdb
Diocese of Thuckalay
ஆயர் சுற்றுமடல்
Bishop's House, P B No: 12,Thuckalay PO, Kanya kumari Dt- 629 175, Tamil Nadu, India

**Circular letter No/GR/35/2021**

# ஆயர் சுற்றுமடல்

ஈசோ மெசியாவில் அன்பிற்குரிய அருட்தந்தையரே! அருட்சகோதரிகளே! அன்பு இறைமக்களே! நம் தந்தையாம் கடவுளிடமிருந்தும், ஆண்டவராம் ஈசோ மெசியாவிடமிருந்தும் அமைதியும் அருளும் உரித்தாகுக!

திருச்சபையின் மிக உன்னதமான வழிபாடாக திருப்பலியானது இருந்து வருகிறது. இதுவே வாழ்வின் ஊற்றும் சிகரமுமாக இருக்கிறது என்பது திருச்சபையின் படிப்பினை. நாம் அனைவரும் சீரோமலபார் திருவழிபாட்டுமுறை சார்ந்த திருப்பலியை நிறைவேற்றிவருகிறோம் என்பதை நீங்கள் அறிவீர்கள். சீரோமலபார் திருச்சபைக்கு உட்பட்ட அனைத்து இடங்களிலும் இத்திருப்பலியை சீராக கொண்டாடும் முறை பற்றிய குழப்பங்கள் நிலவி வந்ததையும் உங்களுள் பலர் அறிவீர்கள். சீராக கொண்டாடும் விதம் பற்றிய முக்கியத் தீர்மானம் 1999 ஆம் ஆண்டில் ஆயர்பேரவையால் எடுக்கப்பட்டதாயினும் அதை நடைமுறைப்படுத்துவதில் சிக்கல் நிலவி வந்தது. இச்சூழலில் கடந்த செப்டம்பர் மாதம் நடந்து முடிந்த சீரோமலபார் ஆயர்பேரவையானது, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் அறிவுறுதத்திலின்படி, திருப்பலியை சீராக கொண்டாடும் விதம்பற்றியத் தீர்மானத்தை ஒருமித்த மனதுடன் எடுத்தது. அத்தோடு, திருப்பலிக்கிடையே சொல்லப்படும் செபங்களில் சிறுதிருத்தங்களையும் திருப்பீடத்தின் ஒப்புதலுடன் கொண்டுவந்தது. இவை திருவழிபாட்டு ஆண்டின் முதல் ஞாயிறான, 2021 நவம்பர் 28 அன்று முதல் நடைமுறைப்படுத்த வேண்டும் என்னும் நிர்பந்தமும் தரப்பட்டிருக்கிறது.

நம்முடைய மறைமாவட்டத்தைப் பொறுத்தவரைக்கும், 1999 ஆம் ஆண்டில்

ஆயர் பேரவையானது எடுத்தத் தீர்மானம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இதன்படி, அனாஃபறா, அதாவது, விசுவாச அறிக்கைவரையிலான பகுதிகளும், திவ்ய நற்கருணை பெற்றுக்கொண்டப் பின்னர் வரும் பகுதிகளும் மக்களைப் பார்த்து நிறைவேற்றப்பட வேண்டும். அனாஃபறா - நற்கருணை வேண்டுதல் - முழுமையாக பலிபீடத்தை நோக்கியும் நிறைவேற்றப்பட வேண்டும். வேறுசிலகாரியங்கள், விருப்புத் தேர்வாக (Optional) தரப்பட்டிருக்கின்றன. நம்முடைய மறைமாவட்டத்தில் அனைத்துப் பங்குகளிலும் ஒரேமுறையில் கொண்டாடும் விதம் சில பரிந்துரைகளை நான் முன்வைக்கிறேன்.

1. “விண்ணுலகில் இருக்கின்ற எங்கள் தந்தையே” என்னும் வேண்டுதலானது, நம்முடைய திருப்பலியில் மும்முறை சொல்லப்படுவது வழக்கம். இதில் முதிலிலும் இறுதியிலும் வருபவை பெரியவை, திவ்யநற்கருணைப் பெறுவதற்கு முன்னால் வருவது சிறியவடிவம். சாதாரண நாட்களில் திருப்பலி நிறைவேற்றும்போது, இறுதியில் வரும் “விண்ணுலகில்இருக்கின்ற...” வேண்டுதல் சொல்ல வேண்டியதில்லை.

2. “அனைத்திற்கும் ஆண்டவரே...” வேண்டுதலானது சாதாரணநாட்களில் ஒருமுறைப் பாடினால் சொன்னால் போதுமானது.

3. ஆடம்பரத்திருப்பலியில் நான்கு வாசகங்கள் இடம்பெறுவது வழக்கம். இரண்டு வாசகங்களின் முடிவில், கீர்த்தனைபாடுவதற்காக அனைவரும் எழுவது வழக்கம். இனிமுதல் அதைச் செய்ய வேண்டியதில்லை. நற்செய்தி வாசகத்திற்கு ஆயத்தமாகப் பாடப்படும் “அல்லேலூயா...” பாடலோ அதற்கு மாற்றான பாடல்களோ பாடும்போது எழும்பினால் போதுமானது.

இனி வேண்டுதல்களில் கொண்டு வரப்பட்டிருக்கும் மாற்றங்களைப் பற்றிக் காண்போம்.

1. “உன்னதங்களிலே எல்லாம் வல்ல...” பாடலுக்குப் பதிலுரையாக மக்கள் பாடும்பாடல் இனிமுதல், “பூமியிலென்றும் மானிடர்க்கமைதி, நம்பிக்கையும் என்றென்றும்” என்றுப் பாடவேண்டும். "பூவுலகெங்கும்” என்பது “பூமியிலென்றும்” என மாற்றப்பட்டுள்ளது.

2. “அனைத்திற்கும் ஆண்டவரே...” பாடலின் முதல்பத்தியின் இறுதி வரியை, “உம்மை வணங்கிப் புகழ்கின்றோம்” என்பதற்குப் பதிலாக “உம்மைப் பாடிப்புகழ்கின்றோம்” எனப் பாடவேண்டும்.

3. “சர்வேசா நீர் தூயவரே...” என்னும் பாடலின் இறுதி வரியானது, “எங்களில் உமதருள் பொழிந்தருளும்” எனப் பாடி வந்தோம். அது, “எம்மேல் இரக்கம் வைத்தருளும்” என மாற்றப்பட்டுள்ளது. அவ்வாறே செப வடிவத்தில், “எங்கள் மேல் அருள் கூர்ந்தருளும்” என்பதற்குப் பதிலாக, “எங்கள் மேல் இரக்கம் வைத்தருளும்” எனப் பயன்படுத்த வேண்டும்.

4. திருவிவிலிய வாசகங்களின் போது, வாசகர்கள் குருவானவரிடம் “குருவே ஆசீர் அளித்தருளும்” எனக் கூறி, தலைவணங்குதல் வழக்கம். இனிமுதல், “ஆண்டவரே ஆசீர் அளித்தருளும்” எனக் கூற வேண்டும்.

5. விசுவாசப்பிரமாணத்திற்கு முன்னர், “தந்தைக்கும் திருமகனுக்கும்...” என்னும் வேண்டுதல்களின் தொகுப்பில் ஆறு வேண்டுதல்கள் உள்ளன. குருவானவர் சொல்லும் மூன்றாவது செபமானது, நமது தந்தையாம் மார்த்தோமாவின் முக்கியத்துவத்தை மனதில்கொண்டு பின்வருமாறு மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. பாடலானது,

> அனைவரும் ஒன்றாய்ப்பபடிடுவீரே
> ஆமேன் - ஆமேன்.
>
> மார்த்தோமா தனையே
> மறைசாட்சியருடனும்
> முத்தர்கள் தம்முடனும்
> நினைவோம் இப்பலியில்.

என மாற்றப்பட்டுள்ளது.

செபமானது.

> இறைக்கள் அனைவரும்
> ஆமேன், ஆமேன் என்று ஆர்ப்பரிக்கட்டும்.
> நமது தந்தையாகிய மார்த் தோமாவை,

வெற்றிவாகை சூடிய நேர்மையாளருடனும்
முடிசூடிய மறைசாட்சியருடனும்
புனித பலிபீடத்தில் நினைவு கூருவோம்.

எனவும் மாற்றப்பட்டுள்ளது.

6. விசுவாச அறிக்கைக்குப் பின்னர் திருப்பணியாளர் சொல்லுகின்ற, "பிதாப்பிதாக்களும், ஆயர்களுமான.." எனும் வேண்டுதலில், "பிதாப்பிதாக்களும், உயர்பேராயர்களும் பேராயர்களும் ஆயர்களுமான நம்தந்தையர்கள்" என மாற்றம் கொண்டுவரப்பட்டுள்ளது.

7. ஈசோ திவ்யநற்கருணையை நிறுவியதை நினைவுகூரும், "ஆண்டவராகிய இறைவா உம் அன்பு மகன் எங்களுக்குக் கற்பித்தது போல...." என்னும் வேண்டுதல்களுக்கு முன்னர் வருகின்ற மூன்றாம் க்ஹாந்தா வேண்டுதலின் சில பகுதிகள் நீக்கப்பட்டுள்ளன. நீக்கப்பட்ட பகுதியானது, நெஸ்தோரியன் நற்கருணை வேண்டுதலிலிருந்து (அனாஃபறா) எடுக்கப்பட்டவை, தற்போது நெஸ்தோரியன் நற்கருணை வேண்டுதலானது தனியாக மலையாள மொழியில் வெளிவந்துள்ளது. மிகவிரைவில், தமிழாக்கம் செய்யப்பட்டு நம்முடைய மறைமாவட்டத்திலும் நடைமுறைக்குவரும்.

8. குருவானவர் ஏறெடுக்கும் பரிந்துரை வேண்டுதலானது, "ஆண்டவரே, எல்லாம் வல்ல இறைவா, முதன்மைக்குருவும் திருச்சபை அனைத்தின் தலைவரும்..." எனத் தொடங்கிச் சொல்லப்பட்டு வந்தது. திருத்தந்தைக்காக வேண்டுகின்ற முதல் வரிகளானது, "ஆண்டவரே, எல்லாம் வல்ல இறைவா, உலகளாவிய திருச்சபையின் தந்தையும் தலைவருமாகிய, மார் (பெயர்) திருத்தந்தைக்காகவும்" என மாற்றப்பட்டுள்ளது. மேலும் "குருக்கள்..." எனத் தொடங்கும் பகுதியில், "திருத்தொண்டர்கள் - துறவியர், பொதுநிலையினர்" போன்றவையும் சேர்க்கப்பட்டுள்ளது.

9. பரிந்துரை வேண்டுதலைத் தொடர்ந்து வரும் நான்காம் க்ஹாந்தா வேண்டுதலை முழுமையாக சொல்வதற்கோ சிலப் பகுதிகளை தவிர்ப்பதற்கோ குருக்களுக்கு சுதந்திரம் அளிக்கப்பட்டிருக்கிறது.

10. மறைப்பொருட்கள் மீது தூய ஆவியார் எழுந்தருளி வருமாறு சொல்லுகின்ற “ஆண்டவரே உமது தூய ஆவியார் எழுந்தருள்வாராக" எனும் வரியானது இனி முதல், திருப்பணியாளரின், “நீங்கள் பக்திவணக்கத்துடன் மௌனமாக ...”எனத் தொடங்கும் வேண்டுதலுக்குப் பின்னர் வரும்.

வேறு ஓரிரு இடங்களில் குருவானவர் ஏறெடுக்கும் வேண்டுதல்களில் சிறு திருத்தங்கள் உள்ளன. அவற்றைப் பற்றியத் தெளிவானது குருக்களுக்கு ஏற்கனவே அளிக்கப்பட்டுள்ளது. குருவானவர் பயன்படுத்தும் திருப்பலி நூலில் மேல்குறிப்பிட்ட மாற்றங்களானவை சேர்க்கப்பட்டு, நூல்கள் 28.11.2021 ஆம் தேதிக்கு முன்னர் கொடுக்கப்படும். மக்கள் பயன்படுத்தும் நூல்களில் தற்போதைக்கு எழுதிச் சேர்த்தால் வசதியாக இருக்கும். திருவழிபாட்டுக் காலங்களுக்குரிய பின்னிணைப்புகளை உள்ளடக்கிய நூலுக்கானப் பணிகள் நடந்து வருகிறது. அவை முடிவடையும் போது, திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுப் புதிய திருப்பலி நூலானது வெளிவரும். அதுவரைக்கும் இக்கடிதம் மூலமாகத் தரப்பட்டிருக்கும் தரவுகளுக்கு ஏற்பச் செயல்பட அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

உங்களுக்காக நான் இறைவனிடம் வேண்டுகிறேன். அருளும் ஆசீரும் உங்களோடு இருப்பதாக.

என்றும் ஈசோ மெசியாவில்

ஆயர் இல்லம்
19.11.2021

மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB
தக்கலை மறைமாவட்ட ஆயர்

குறிப்பு: இச்சுற்றுமடலானது 21.11.2021 அன்று திருப்பலிக்குப் பின்னர் மறைமாவட்டத்திலுள்ள அனைத்து பங்குகளிலும் சிற்றாலயங்களிலும் வாசிக்கவும்.

Bishop George Rajendran sdb
Diocese of Thuckalay

ஆயர் சுற்றுமடல்

Bishop's House, P B No: 12,Thuckalay PO, Kanya kumari Dt- 629 175, Tamil Nadu, India

**Circular letter No/GR/36/2021**

# ஆயர் சுற்றுமடல்

ஈசோ மெசியாவில் அன்பிற்குரிய அருட்தந்தையரே! அருட்சகோதரிகளே! அன்பு இறைமக்களே! நம் தந்தையாம் கடவுளிடமிருந்தும், ஆண்டவராம் ஈசோ மெசியாவிடமிருந்தும் அமைதியும் அருளும் உரித்தாகுக!

"உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியை பறைசாற்றுங்கள்" (மாற்கு 16:15) என்ற இறைவர்த்தையின்படி மார் தோமையாரிடமிருந்து நாம்பெற்ற இறையனுபவத்தை உலகெங்கும் பறைசாற்றிட நாம் அனைவரும் கடமைப்பட்டிருக்கின்றோம். நமது தக்கலை மறைமாவட்டமானது கன்னியாகுமரி எல்லையை கடந்து தமிழ்நாட்டின் பல மாவட்டங்களிலும் மறைத்துது பணியாற்றி வருகின்றது. நமது மறைமாவட்டம் துவங்கப்பட்டக் காலத்திலேயே செங்கோட்டை தாலூகாவிலும் நமது அருட்தந்தையர்கள் மறைப்பரப்பு பணியாற்ற துடங்கினர். தற்பொழுது செங்கோட்டை மறைத்தளமானது தனது வெள்ளி விழாவிற்கு ஆயத்தமாகின்றது. அதன் துவக்கவிழாவானது 19.12.2021 அன்று புளியரை ஆலயத்தில் வைத்து சிறப்பாக கொண்டாடப்பட உள்ளது. இத்தருணத்தில் இம்மறைத்தொண்டுதளத்தின் உருவாக்கத்தையும் அதன் திருத்தொண்டு நிலையங்கள் மற்றும் பணிகளைப்பற்றி உங்களோடு பகிர்ந்து கொள்வதில் பெரும் மகிழ்ச்சியடைகிறேன்.

திருத்தந்தை 12 ஆம் பயஸ் அவர்கள் 1955 ஆம் ஆண்டு ஏப்ரல் 29 ஆம் நாள் வெளியிட்ட "முள்தோரும் பிதேலியம்" என்னும் மடல் வழியாக சீரோமலபார் திருச்சபையில் சங்னனாச்சேரி மறைமாவட்டத்தின் எல்லையை கன்னியாகுமரி மாவட்டத்திலும் செங்கோட்டை வட்டாரத்திலும் விரிவாக்கம் செய்ய அனுமதி ஆணை வழங்கினார். அதன்படி சங்னானச்சேரி பேராயர்

மார் மாத்யூ காவுகாட் அவர்கள் மறைத்தொண்டு பணிகளுக்காக குருக்களை கன்னியாகுமரி மாவட்டத்திற்கு அனுப்பி வைத்தார் என்பது நாம் அனைவரும் அறிவோம். 1996 ஆம் ஆண்டு MCBS துறவற சபையைச் சார்ந்த அருட்தந்தை தோமஸ் பொட்டம்பறம்பில் அவர்கள் சங்ஙானாச்சேரி பேராயரின் அனுமதியோடு செங்கோட்டை வட்டத்திற்குட்ப்பட்ட செங்கோட்டை இரயில்வே நிலையம் அருகில் உள்ள விஸ்வநாதபுரத்தில் ஒரு வீட்டில் தங்கி திருப்பலியும், தையல் பயிற்சியும் நடத்தி வந்தார். 1996 ஆம் ஆண்டு தக்கலை மறைமாவட்டம் உருவாகியபோது அதே ஆண்டில் அன்றைய மேதகு ஆயர் மார் ஜார்ஜ் ஆலஞ்சேரி அவர்கள் அன்றைய குருகுல முதல்வராக பணியாற்றி கொண்டிருந்த பேரருட்தந்தை தோமஸ் முட்டத்துக்குந்நேல், பேரருட்தந்தை பிலிப்பு கொடியந்தறா, பேரருட்தந்தை பிலிப்பு வைக்கத்துக்காரன்வீட்டில் ஆகியோரை செங்கோட்டை தாலுகாவை பார்வையிடுவதற்காக அனுப்பிவைத்தார். இவர்களின் ஆலோசனையின்படி அருட்தந்தை மேத்யூ குழிஞ்ஞாலில் மற்றும் அருட்தந்தை பீட்டர் கிழேக்கேல் ஆகியோரை ஆயர் அவர்கள் மறைபரப்பு பணி செய்ய அனுப்பி வைத்தார். அவர்களின் ஆன்மிக ஈடுபாடு மற்றும் மறைத்தொண்டு பணியிலுள்ள ஆர்வத்தினால் 1997 ஆம் ஆண்டு புளியரை பகவதிபுரத்தில் ஒரு வாடகை வீட்டில் தங்கி திருப்பலி நிறைவேற்றி வந்தார்கள். இவ்வாறாக 1997 ஆம் ஆண்டு செங்கோட்டை மறைத் தொண்டு தளம் உருவானது.

அருட்தந்தை மாத்யூ குழிஞ்ஞாலில் மற்றும் அருட்தந்தை பீட்டர் கிழக்கேல் ஆகியோரோடு சேர்ந்து அருட்சகோதரி மேரியா SDS, அருட்சகோதரி மேரி ஜோசப் OMMI, சகோதரர் விஜயன் மஞ்ஞாலுமூடு, Holy Cross அருட்சகோதரிகள், மற்றும் CMC அருட்சகோதரிகள் ஆகியோர் இப்பகுதியில் மறைத்தொண்டுதள உருவாக்கத்திற்கு அரும்பாடுபட்டனர். மறைத்தொண்டு பணிக்காக உதவி செய்த திருமதி சாலிகுற்றாலம் மற்றும் திருமதி வல்சம்மா ஆகியோரை நன்றியோடு நினைவு கூறுகின்றோம். மறைத்தொண்டு பணிகள் நடந்துகொண்டு இருந்த வேளையில் ஆரியங்காவை சேர்ந்த SH அருட்சகோதரிகளும் பங்கு மக்களும் அவ்வாறே அச்சன்கோவில் Holy Cross அருட்சகோதரிகளும் உதவிகரம் நீட்டினர். செங்கோட்டை பகுதியில் மக்கள் நலபணிகள் சிறப்புற நடைபெறவும் ஆலயம் கட்டுவதற்கான அனுமதியையும் வழங்கிய திருநெல்வேலி மாவட்டத்தின் அன்றைய ஆட்சியாளராக பணியாற்றிய மாவட்ட ஆட்சியாளர் மாண்புமிகு சுனில் பாலிவால் அவர்களுக்கு

இவ்வேளையில் நன்றியைத் தெரிவித்து கொள்கின்றேன்.

புளியரை பங்கில் இருந்துகொண்டே மேக்கரை மற்றும் புதூர் போன்ற இடங்களிலும் மறைப்பணியாற்றி திருமுழுக்கு கொடுத்து வந்தனர். அதன் பயனாக புளியரை பகவதிபுரத்தில் ஒரு மறைத்தொண்டுத்தளம் உருவாக்கி ஆலயத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டு 1999 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் மார் ஜார்ஜ் ஆலஞ்சேரி ஆண்டகை அவர்களால் அர்ச்சிக்கப்பட்டது. இம்மறைத்தொண்டுத்தளம் தொடங்கிய 1997 ஆம் ஆண்டே சமூகப்பணிகளுக்காக செங்கோட்டை பிரானூர் பார்டரில் புலரி சமூகசேவை மையம் ஆரம்பிக்கப்பட்டு இன்று வரை இங்கு சுய உதவிக்குழுக்கள், பெண்கள் முன்னேற்றம், சிறுசேமிப்பு, சுயஉதவி மையங்கள், படுக்கை நோயாளிகளை பராமரித்தல் போன்ற பல சமூக நலப்பணிகளை நமது மறைமாவட்டம் செய்து வருகின்றது. அருட்தந்தை பீட்டர் கிழக்கேல் அவர்களின் அயராத உழைப்பினால் 1999 ஆம் ஆண்டு மேக்கரையில் ஒரு திருத்தொண்டு மையம் ஆரம்பிக்கப்பட்டது. அவ்வாறு அங்கு ஒரு ஆலயமும் உருவாக்கப்பட்டது. இங்கு குழந்தைகளின் கல்வி அறிவை மேம்படுத்தும் வகையில் மாலைப்பள்ளிக்கூடம் ஆரம்பிக்கப்பட்டு இன்றளவும் மாணவர்கள் பயன்பெறும் விதத்தில் பணி செய்து வருகிறது.

2000 ஆம் ஆண்டில் அருட்தந்தை ஆண்டனி பேடிக்காட்டுக்குந்நேல் அவர்கள் வாஞ்சி நகருக்கு வருகைதந்து ஒரு சிறிய வீட்டை வாடகைக்கு எடுத்து தனது பணியை தொடங்கினார். 2003 ஆம் ஆண்டு ஒரு ஆலயம் வடிவமைக்கப்பட்டு அங்கு திருத்தொண்டு பணிகள் தொடங்கப்பட்டு தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. 2002 ஆம் ஆண்டு லாலாக்குடியிருப்பில் மக்களின் நலம் கருதி சாந்தோம் மருத்துவ சேவை மையம் ஆரம்பிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. அதே ஆண்டில் தென்காசி களக்கொடி தெருவில் திருமதி அமலோற்பவம் என்ற ஆசிரியையின் வீட்டின் அருகாமையில் மாதாவின் கெபி அமைக்கப்பட்டு வருடந்தோறும் டிசம்பர் 8-ஆம் தேதியன்று திருப்பலி நிறைவேற்றப்பட்டு, தற்பொழுது இது தென்காசி திருத்தொண்டுத்தளமாக செயல்பட்டு வருகிறது. 2005 ஆம் ஆண்டு புதூரில் ஒரு இடத்தை வாங்கி ஒரு பள்ளிக்கூடம் துவங்கப்பட்டு அதோடு இணைந்து புனித தோமையார் என்ற சிற்றாலயம் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. 2018 ஆம் ஆண்டு சுந்தராண்டியபுரம் என்ற ஊரில் செபக்கூடுகை ஆரம்பிக்கப்பட்டு தற்பொழுது ஒரு மறைத்தொண்டுதளமாக செயல்பட்டு வருகின்றது.

தென்காசி மறைத்தொண்டு பணிகளின் ஆரம்ப காலத்திலிருந்தே MCBS துறவற சபையைச்சார்ந்த அருட்தந்தையர்கள் பண்பொழி, சுரண்டை ஆகிய இடங்களில் பள்ளிக்கூடங்களும் வடகரையில் மனநலம் குன்றிய மக்களை பாதுகாக்க அன்பு இல்லமும் அமைத்து தங்களது பணிகளை தொடர்ந்து செய்து வருகின்றனர். தற்பொழுது செங்கோட்டை மறைத்தொண்டுத்தளம் என்ற பெயரை மாற்றி தென்காசி மறைத்தொண்டுதளம் என்னும் பெயரில் புளியரை, புதூர், வாஞ்சி, மேக்கரை ஆகிய நான்கு ஆலயங்களும் சுந்தரபாண்டியபுரம், தென்காசி, கீழ ஆம்பூர், சுரண்டை , சாம்பவர் வடகரை, பாட்டாக்குறிச்சி ஆகிய மறைத்தொண்டு மையங்களிலுமாக 12 அருட்தந்தையர்கள் மற்றும் HC, CMC, DSHS, FCC துறவற சபைகளை சார்ந்த அருட்கன்னியர்கள் பணிபுரிந்து வருகின்றனர். இம்மறைத்தொண்டுத் தளங்களின் வளர்ச்சிக்காகவும் அதன் தேவைகளுக்காகவும் இறைவனிடம் மான்றாட வேண்டியது தக்கலை மறைமாவட்ட மக்களாகிய நமது கடமை.

ஆண்டவராகிய ஈசோ மெசியாவின் மறைபரப்பு பணியை தமிழகத்தின் பல இடங்களில் நம்மால் செய்ய முடிகிறது என்பதில் நாம் ஒவ்வொருவரும் பெருமையடைவோம். இந்த வருட உண்டியல் காணிக்கையை நமது தென்காசி மறைத்தொண்டு வளாச்சிப் பணிகளுக்காக செலவிடவுள்ளோம் என்பதையும் உங்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கின்றேன். இந்த மாதம் 19ஆம் தேதி செங்கோட்டை மறைத்தொண்டுத்தளத்தின் வெள்ளிவிழா கொண்டாட்டத் துவக்கவிழாவில் கலந்துகொள்ள விரும்புகிறவர்கள் உங்கள் பெயரை பங்கு தந்தையிடம் பதிவு செய்ய வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

எல்லாம் வல்ல இறைவன் உங்களை ஆசீர்வதிப்பராக!

ஆயர் இல்லம்
*10.12.2021*




என்றும் ஈசோ மெசியாவில்

மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB
தக்கலை மறைமாவட்ட ஆயர்

குறிப்பு: இச்சுற்றுமடலானது 12.12.2021 அன்று திருப்பலிக்குப் பின்னர் மறைமாவட்டத்திலுள்ள அனைத்து பங்குகளிலும் சிற்றாலயங்களிலும் வாசிக்கவும்.



# CATECHISM மறைக்கல்வி

> "விழிப்பாயிருங்கள்; நம்பிக்கையில் நிலைத்திருங்கள்; துணிவுடன் நடந்து கொள்ளுங்கள்; வலிமையுடன் செயல்படுங்கள். அனைத்தையும் அன்போடு செய்யுங்கள்"
> (1கொரி 16:13-14)

மறைக்கல்வி மாணவர்களுக்கான விவிலிய கலைவிழாப் போட்டிகள் 2021 டிசம்பர் 28 முதல் 31 வரை நடைபெற்றன. மறைவட்ட அளவில், மறைவட்ட இயக்குநர்கள் இந்நிகழ்வுகளை மறைமாவட்ட இயக்குநர் மற்றும் துணை இயக்குநருடன் சேர்ந்து ஏற்பாடு செய்து சிறப்பாக நடத்தி முடித்தனர். பாடல், பேச்சு, நடனம், Mono Act போன்ற போட்டிகள் நடந்தன. சூசைபுரம் மறைவட்ட போட்டிகள் சூசைபுரம் APJM பள்ளிக்கூட வளாகத்திலும், தக்கலை பிலாங்காலை போட்டிகள் காட்டாத்துறை புனித மிக்கேல் மெட்ரிக் பள்ளிக்கூடத்திலும், மஞ்சாலுமூடு மறைவட்ட போட்டிகள் முக்கூட்டுக்கல் திருக்குடும்ப பள்ளிக்கூடத்திலும், களியல் மறைவட்ட போட்டிகள் களியல் புனித மரியா பள்ளிக்கூடத்திலும், படந்தாலுமூடு மறைவட்ட போட்டிகள் படந்தாலுமூடு திரு இருதய பள்ளிக்கூடத்திலும், நித்திரவிளை மறைவட்ட போட்டிகள் கிறிஸ்துராஜபுரம் ஜெய மாதா பள்ளிக்கூடத்திலும், ஆறுகாணி மறைவட்ட போட்டிகள் ஆறுகாணி திருக்குடும்ப பள்ளிக்கூடத்திலும் வைத்து நடத்தப்பட்டன.

முதலிடங்களை பிடித்த நிலையங்கள்

| மறைவட்டம் | முதலிடம் | இரண்டாம் இடம் | மூன்றாம் இடம் |
|---|---|---|---|
| களியல் | பள்ளிக்கோணம் | களியல் | மாறப்பாடி |
| மஞ்சாலுமூடு | மஞ்சாலுமூடு | மாலைக்கோடு | முழுக்கோடு |
| நித்திரவிளை | வாறுதட்டு | நித்திரவிளை | சீனிவிளை |
| படந்தாலுமூடு | படந்தாலுமூடு | பளுகல் | கழுவந்திட்டை, அன்னிக்கரை |
| சூசைபுரம் | பாலப்பள்ளம் | சூசைபுரம், கிள்ளியூர் | மாங்கரை |
| தக்-பிலாங்காலை | தக்கலை | காட்டாத்துறை | நாகர்கோவில் |
| ஆறுகாணி | நெட்டா | ஆறுகாணி | பத்துக்காணி |

| BIRTHDAY OF REV. FATHERS- JANUARY - 2022 | |
|---|---|
| Fr. Ajin Jose | 17 |
| Fr. Luka Kollamparampil CMI | 17 |
| Fr. Toji Parambilparambil | 18 |
| Fr. Sanil Panthichirackal | 20 |
| Fr. Printo Kurias | 21 |
| Fr. Antony Chundelikkatt | 24 |
| Fr. Lijo Thekkel | 24 |
| Fr. Geo Choozhikunnel | 26 |
| Fr. Jomon Mangalamadom | 26 |

# புலம்பெயர்ந்தோருடன் இணையவழி கிறிஸ்மஸ் கொண்டாட்டம்

மறைமாவட்டத்தைச் சேர்ந்த மக்களுள் பலர் உலகின் பல நாடுகளிலும், நம் நாட்டின் இதரப் பகுதிகளிலும் வேலை நிமித்தமாக புலம் பெயர்ந்து வாழ்கிறார்கள். இவர்களுடன் ஆயர் அவர்கள் இணையம் வழியாக 17.12.2021 அன்று கலந்துரையாடி வாழ்த்துகளை தெரிவித்தார். இதை அருட்தந்தை சுமேஷ் அவர்கள் ஒருங்கிணைத்தார். குருகுல முதல்வர் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்.

சிறுமலர்
MISSION LEAGUE

# மிஷன் லீக்

***கையெழுத்துப் பிரதி தயாரித்தல் போட்டி***

மிஷன் லீக் இயக்கத்தின் வளர்ச்சிக்காகவும் மாணவர்களின் விசுவாச வாழ்வை வலுப்படுத்தவும் பல வழிகளில் இயக்குநரோடு இணைந்து பொறுப்பாளர்கள் உழைத்து வருகிறார்கள். அதன் முதற்படியாக வெள்ளிவிழா நிறைவு செய்திருக்கும் மறைமாவட்டத்தைப் பற்றி அறியும் நோக்கத்தோடும், புனித யோசேப்பு ஆண்டின் சிறப்புகள் பற்றி அதிகம் தெரிந்து கொள்ளவும் ஒரு கையெழுத்துப்பிரதி தயாரித்தல் போட்டி நடைபெற்றது. ஒவ்வொரு பங்கிலிருந்தும் ஒரு பிரதி என்னும் முறையில் இது அமைந்தது. பல உறுப்பினர்கள் இதில் கலந்து கொண்டார்கள்.

இப்படிக்கு
அருட்தந்தை பிரின்டோ குரியாஸ்
இயக்குநர்.

| ***வரவிருக்கும் நிகழ்வுகள்*** | |
|---|---|
| கூட்டொருங்கியக்கத் திரு அவை - கருத்தமர்வு I | ஜன. 04 |
| கூட்டொருங்கியக்கத் திரு அவை - கருத்தமர்வு II | ஜன. 08 |
| திருத்தொண்டு மாபெரும் வினாடி வினா -2022 | ஜன. 09 |
| படந்தாலுமூடு, நித்திரவிளை மறைவட்ட அருட்தந்தையர் கூட்டம் | ஜன. 10 |
| சூசைபுரம், தக்-பிலாங்காலை மறைவட்ட அருட்தந்தையர் கூட்டம் | ஜன. 11 |
| ஆறுகாணி, மஞ்சாலுமூடு, களியல் மறைவட்ட அருட்தந்தையர் கூட்டம் | ஜன. 12 |
| MCBS வெள்ளிவிழா திருத்தொண்டு பணியாளர் கூட்டம் | ஜன. 18 |
| கூட்டொருங்கியக்கத் திரு அவை - கருத்தமர்வு தென்காசி, விரிவாக்கப்பட்ட எல்லை | ஜன. 19 |

YOUTH APOSTOLATE
இளையோர் பணி

## சீரோ மலபார் இளையோர் இயக்கம் SMYM

### நடுவண் செயற்குழு தேர்வு

தக்கலை மறைமாவட்ட சீரோ மலபார் இளையோர் இயக்கத்தின் நடுவண் செயற்குழு தேர்வானது 05.12.2021 ஞாயிற்றுக் கிழமையன்று கல்லுவிளை SMYM அலுவலகத்தில் வைத்து பிற்பகல் 2 மணிக்கு இயக்குநர் தந்தை ஜோசப் சந்தோஷ் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இதில் மறைவட்ட செயற்குழுவினர்கள் வருகை தந்தனர். மேலும் பழைய நடுவண் செயற்குழு உறுப்பினர்கள், மறைமாவட்ட ஊக்குவிப்பாளர் Sr. ஷெரின் மற்றும் அருட்சகோதரிகள், சூசைபுரம் இயக்குநர் தந்தை சுபின் அவர்களும் கலந்து கொண்டனர். இயக்குநர் தந்தை ஜோசப் சந்தோஷ் அவர்கள் செயற்குழு உறுப்பினர்களின் செயல்பாடுகள் குறித்து எடுத்துரைத்தார். பின் தேர்தல் நடைபெற்றது. தேர்தலின் இறுதியில்

தலைவர் : மெர்பின் தாஸ்

இணைத்தலைவர்: ஜாஸ்மின்

துணைத்தலைவர்: அஞ்சனா

செயலர் : சஜித்

துணைச் செயலர்: மேரி ஜெனிஷா

பொருளர் : அஜித்

ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பின் ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். இயக்கப்பாடலுடன் கூட்டம் நிறைவுற்றது.

### இளையோர் கல்விச் சேவைப் பணியகம்

தக்கலை இளையோர் கல்வி சேவை பணியகம் படந்தாலுமூடு திருஇருதய பள்ளிக்கூடத்தில் தலைமையில் 2021, டிசம்பர் 9,10 தேதிகளில் மாணவர்களுக்கான கருத்தரங்கம் நடந்தது. கருத்தரங்கை திருச்சி தொன் போஸ்கோ வழிகாட்டி இயக்குநர் தந்தை அருள் ஆன்டணி Sdb மற்றும் அருட்தந்தை ஜாண்பால் sdb ஆகியோர் பயிற்சிகள் அளித்தனர். கருத்தரங்கில் மாணவர்களுக்கு வாழ்க்கைத் திறன் பயிற்சியும், கைபேசி அடிமைத்தனத்தைக் குறித்தும், பெற்றோர்-குழந்தை உறவு குறித்தும் வகுப்புகள் நடத்தப்பட்டன. ஐநூறுக்கும் மேற்பட்ட மாணவர்கள் இவ்வகுப்பில் கலந்து கொண்டனர்.

### ஆண்டுவிழா மற்றும் கிறிஸ்மஸ் கொண்டாட்டம்

தக்கலை மறைமாவட்ட சீரோ மலபார் இளையோர் இயக்கத்தின் 2021 ஆம் ஆண்டிற்கான ஆண்டுவிழா மற்றும் கிறிஸ்மஸ் கொண்டாட்டமானது

*12.12.2021* அன்று புனித சூசையப்பர் ஆலயம் காரோடில் வைத்து நடைபெற்றது. இளையோர் மறைக்கல்வி YOUCAT இன் வினாடி வினா இறுதிப் போட்டியானது காலை *11.30* மணிக்கு மறைமாவட்ட இயக்குநர் ஜோசப் சந்தோஷ் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. திரு இருதய அலகு படந்தாலுமூடு இரண்டாம் இடத்தையும், புனித வியாகப்பர் அலகு மாங்கரை மூன்றாம் இடத்தையும் வென்றது. கருத்தும் கானமும் போட்டியில் சிறுமலர் அலகு பிலாங்காலை முதலிடத்தையும், சிறுமலர் அலகு மஞ்சாலுமூடு இரண்டாம் இடத்தையும், புனித



போட்டியின் இறுதியில் திரு இருதய அலகு படந்தாலுமூடு முதலிடத்தையும், புனித சேவியர் அலகு கைசாலவிளை இரண்டாம் இடத்தையும், கிறிஸ்து அரசர் அலகு பாலப்பள்ளம் மூன்றாம் இடத்தையும் வென்றன. பின்னர் கிறிஸ்மஸ் ஒட்டிய 'கருத்தும் கானமும்' என்னும் தலைப்பில் பாடல் போட்டியும் நடைபெற்றது. மீட்பரின் பிறப்பை குறிக்கும் பெத்லகேம் என்னும் தலைப்பை மையமாகக் கொண்டு நடைபெற்ற குறும்படப் போட்டியில் புனித பவுல் அலகு, தெற்றியோடு முதல் இடத்தையும், வியாகப்பர் அலகு மாங்கரை மூன்றாம் இடத்தையும் பெற்றது. போட்டிகள் முடிந்தவுடன் ஆண்டுவிழா கூட்டம் நடந்தது. SMYM காரோடு இளையோர்கள் சிறப்பாக வரவேற்பு நடனமாடினர். களியல் மறைவட்ட இயக்குநர் தந்தை அஜீஷ் அட்டியில் அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். சிறப்பு விருந்தினர்களால் குத்துவிளக்கு ஏற்றப்பட்டது. மற்றும் கடந்த ஒரு வருட காலமாக நடந்த தக்கலை கத்தோலிக்க இளையோர் இயக்க நிகழ்ச்சிகளை மறைமாவட்ட பொறுப்பாளர்கள் ஜெனிஷா மற்றும்

ஆனந்தி ஆகியோர் அறிக்கையை வாசித்தனர். அது காணொளித் தொகுப்பாக இருந்தது. வயலின்கரை மற்றும் களியல் பங்கு இளையோர்கள் நடனம் ஆடி மகிழ்வித்தனர். மேலும் சிறப்பு விருந்தினராக வருகைத் தந்த குமரித்தோழன் திரு ஜாண் அவர்கள் சிறப்புரையாற்றினார். பின்னர் மறைமாவட்ட இயக்குநர் தந்தை ஜோசப் சந்தோஷ் அவர்கள் தலைமையில் புதிய நடுவண் செயற்குழு உறுப்பினர்கள் பொறுப்பேற்றனர்.

தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களோடு இணைந்து, ஆலோசகர்களாக நியமிக்கப்பட்ட ஜெசின், ஜெனிஷா, பிரவீன், மெர்னிஷா, சுஜித் மற்றும் ஆனந்தி ஆகியோரும் பொறுப்பேற்றனர். இயக்கத்தின் முன்னாள் தலைவர் திரு. ஜெசின் அவர்கள் தமது அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டார். பின்னர் தக்கலை மறைமாவட்ட குருகுல முதல்வர் அவர்கள் தலைமையுரை ஆற்றினார். பின்னர் பரிசு வழங்குதல் நடைபெற்றது. ஊரடங்கு நாட்களில் நடத்தப்பட்ட போட்டிகளுக்கான பரிசுகளும், YouCat இல் அதிகமாக பங்கேற்றவர்களுக்கு சிறப்புப் பரிசும், மற்றும் வினாடி வினா போட்டிகளுக்கான பரிசுத் தொகைகளும், பாடல் போட்டி மற்றும் குறும்படப் போட்டிக்கான பரிசுத் தொகையும் வழங்கப்பட்டது. குறும்பட சிறந்த இயக்குநருக்கான விருதை ஜெசின் அவர்களும், சிறந்த ஒளிப்பதிவாளருக்கான விருதை மாங்கரை ஆன்டோ ஜாண் அவர்களும் பெற்றனர். மேலும், முன்னாள் நடுவண் குழு உறுப்பினர்களுக்கு நினைவுப் பரிசுகள் வழங்கப்பட்டன. நிகழ்வை மெரின் சுஜித் மற்றும் ஸ்டார்வின் ஆகியோர் தொகுத்து வழங்கினர். களியல் மறைவட்ட தலைவர் தினேஷ் அனைவருக்கும் நன்றி கூறினார். இயக்கப்பாடலுடன் நிகழ்வு மாலை 6.30 மணிக்கு நிறைவுற்றது. இளையோரை ஊக்கமூட்டும் வகையில் ஆடல் நிகழ்ச்சி அதற்குப் பின்னர் நடந்தது. விழாவை சிறப்பாக நடத்திட உதவிய களியல் மறைவட்ட இயக்குநரும், காரோடு பங்குத் தந்தையுமாகிய அருட்தந்தை அஜீஷ் அட்டியில் மற்றும் பங்குமக்கள் ஆலய இளையோர்கள் குறிப்பாக தலைவர் ஜினோ ஆகியோருக்கு மனமார்ந்த நன்றிகளை இயக்கம் சார்பாக தெரிவித்துக் கொள்கிறோம். மேலும் விழாவில் பங்கேற்க வந்த அருட்தந்தையர்கள் அருட்சகோதரிகள் மற்றும் அனைவருக்கும் நன்றிகள்.

## *நடுவண் செயற்குழு கூட்டம்*

தக்கலை சீரோ மலபார் இளையோர் இயக்கத்தில் கடந்த ஒரு வருட காலமாக சிறந்த முறையில் செயலாற்றிய பழைய நடுண் குழு உறுப்பினர்கள் கூட்டமானது 26.12.2021 அன்று காலை 11 மணியளவில் புனித பவுல் ஆலயம் தெற்றியோட்டில் வைத்து நடைபெற்றது. இயக்குநர் தந்தை ஜோசப் சந்தோஷ் அவர்கள் தலைமையில் சிறு சுற்றுலாவும் நடைபெற்றது.

புதிய நடுவண் செயற்குழு கூட்டமானது 27.12.2021 அன்று காலை 11 மணியளவில் தெற்றியோடு புனித பவுல் ஆலய வளாகத்தில் வைத்து நடைபெற்றது. கூட்டத்தில் பொங்கல் விழாவை ஒட்டிய நிகழ்ச்சிகளைப் பற்றி ஆலோசிக்கப்பட்டது. அனைத்துப் பங்குகளிலும் இளையோர் இயக்கம் முறையாக நடைபெறுகிறதா என்பதை அறிய ஆலய சந்திப்பு பற்றி முன்னாள் தலைவர் அவர்கள் உரையாற்றினார். இளையோர் இயக்கத்தின் ஊக்குவிப்பாளராக செயல்பட்டு வரும் பொதுநிலையினருக்கு பயிற்சி அளித்து அடையாள அட்டை வழங்குவதற்கான ஆவன செய்ய ஆலோசிக்கப்பட்டது. மேலும் படித்து முடித்தப் பின்னர் வேலையில்லாமல் இருக்கும் இளையோரை வேலைவாப்பு பெற நம் மறைமாவட்டத்தில் செயல்பட்டு வரும் TYES என்னும் அமைப்பை பயன்படுத்திக் கொள்ள அனைவருக்கும் அறிவுறுத்தவும் தீர்மானிக்கப்பட்டது.

## தக்கலை - பிலாங்காலை மறைவட்ட இளையோர் கிறிஸ்மஸ் விழா

தக்கலை-பிலாங்காலை மறைவட்ட இளையோருக்கான சிறப்பு கிறிஸ்மஸ் கொண்டாட்டமானது, மறைவட்டப் பொறுப்பாளர்கள் ஏற்பாடு செய்ய சிறப்பாக நடந்தது. நிகழ்வானது 19.12.2021 அன்று பிலாங்காலை ஆலய வளாகத்தில் வைத்து நடைபெற்றது. பாடல் போட்டி, Cooking without Fire மற்றும் puzzle போட்டிகள் நடைபெற்றன. மறைவட்டத்தைச் சார்ந்த இளையோர்கள் அனைவரும் ஆர்வமுடன் பங்கேற்றனர். அருட்தந்தை தோமஸ் தெக்கேத்தலா அவர்கள் அனைத்து ஏற்பாடுகளையும் செய்தார். போட்டிகளின் இறுதியில், மறைமாவட்ட இயக்குநர் தந்தை ஜோசப் சந்தோஷ், அருட்தந்தை டோஜி



மற்றும் மறைவட்ட ஊக்குவிப்பாளர் அருட்சகோதரி எலைசா FCC ஆகியோர் வெற்றிப் பெற்றோருக்குப் பரிசுகள் வழங்கினர். மறைவட்டத் இயக்குநர், ஊக்குவிப்பாளர் தலைவர் ரெனிஷ் மற்றும் அனைத்துப் பொறுப்பாளர்களுக்கும் வாழ்த்துகளும் நன்றிகளும்.

இவண்

சஜித், செயலர்

# இல்வாழ்வு இயக்கம்



இப்புத்தாண்டில் நிறைந்த வளம், நிறைந்த ஆரோக்கியம்,
மிகுந்த சந்தோஷம், வெற்றியென பல ஆசீர்வாதங்கள் கிடைக்கட்டும்.
இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்.

## *இல்வாழ்வு இயக்கம்*

"தாழ்நிலையில் இருந்த தம் அடியாரைத் தயவுடன் கடைக்கண் நோக்கினார்" என்ற இறைவார்த்தைக்கு இணங்க துன்பப்பட்டு வாழ்வாதாரத்தை இழந்து தவிக்கின்ற குடும்பங்களுக்கு முன்னேற்ற பாதையில் கொண்டு செல்ல ஒரு வழிகாட்டியாக இவ்வியக்கம் செயல்பட்டு வருகிறது.

டிசம்பர் 8ம் தேதி "முன்மாதிரியான அப்பா" என்னும் தலைப்பில் கட்டுரை எழுதும் போட்டி whatsapp மூலமாக நடைபெற்றது. இப்போட்டியில் 65 தாய்மார்கள் மற்றும் தந்தையர்கள் கலந்து கொண்டனர். மறைவட்ட அளவில் பரிசுகள் வழங்கப்பட உள்ளது.

இல்வாழ்வு இயக்க பணியாளருக்கான கிறிஸ்துமஸ் விழா டிசம்பர் 22 ஆம் தேதி காலை 11 மணியாளவில் இல்வாழ்வு இயக்க அலுவலகத்தில் வைத்து நடைபெற்றது. விழாவிற்கு இயக்குநர் தந்தை அவர்கள் தலைமை தாங்கினார்கள் . இயக்குநர் தந்தை அவர்கள் Christmas cake cut செய்து பணியாளருக்கு பகிர்ந்து அளித்தார். இவ்விழாவில் அருட்தந்தை பிறின்டோ, அருட்சகோதரி ஜெயின் றோஸ் CHF, அருட்சகோதரி ஆன்சி SABS, டாக்டர் பெற்றி, ஆகியோர் கலந்து கொண்டனர். விழாவில் மதிய உணவு மற்றும் Christmas Gift வழங்கப்பட்டது.



### *மாதர் ஜோதிஸ் இயக்கம்*

ஞானமுள்ள பெண்கள் தம் இல்லத்தைக் கட்டியெழுப்புகின்றனர். அறிவற்றவரோ தம் கைகளைக் கொண்டே அதை அழித்து விடுகின்றனர்.(நீதிமொழிகள் 14 :1).

என்ற இறைவசனத்திற்கு இணங்க ஞானமுள்ள பெண்களை உருவாக்க மாதர் ஜோதிஸ் இயக்கம் பக்கபலமாக இருந்த செயல்பட்டு வருகிறது. இறைவார்த்தை எழுதும் போட்டி டிசம்பர் 12 ம் தேதி மதியம் 2 மணி அளவில் மறைவட்ட ஆலயங்களில் வைத்து நடைபெற்றது. இதில் 60 பேர் தேர்வு எழுதினார்கள். இவர்களுக்கு மறைவட்ட அளவில் ஆண்டு விழாவின் போது பரிசுகள் வழங்கப்படும்.

### *Christmas Gathering*

மாதர் ஜோதிஸ் தாய்மார்களுக்கான கிறிஸ்துமஸ் கூட்டம். இல்வாழ்வு இயக்க அலுவலகத்தில் வைத்து டிசம்பர் 18 ம் தேதி மதியம் 1.45 மணியளவில் தொடங்கப்பட்டது. இக்கூட்டத்தில் சிறப்பு விருந்தினராக மேதகு ஆயர் ஜார்ஜ் ராஜேந்திரன் அவர்கள் வருகைப்புரிந்தார்கள். இறைவணக்க பாடலை முழுக்கோடு பங்கை சார்ந்தவர்கள் பாடினார்கள். கிறிஸ்துமஸ் cake யை ஆயர் அவர்கள் கட் செய்து விழாவில் கலந்து கொண்டவருக்கு பகிர்ந்து அளித்தார். அப்போது பேசுகையில் மாதர் ஜோதிஸ் இயக்கம் வளர்ச்சியடைந்துள்ளது என்றும் மேலும் வளர்சியடைய தாய்மார்கள் ஒத்துழைக்க வேண்டும் என்று கூறினார்கள். தாய்மார்கள் தனியாக விவிலியம் முழுவதும் எழுதி சமர்ப்பித்ததை பார்வையிட்டார். பின்னர் இயக்குநர் தந்தை அவர்கள் தாய்மார்களோடு கலந்துரையாடி Task மற்றும் ஆண்டுவிழாவை குறித்து விவாதிக்கப்பட்டது. மேலும் Smart Christmas Savings scheme அறிமுகப்படுத்தப்பட்டது. ஜனவரி 2022 முதல் வாரந்தேறும் 100 ரூபாய் வீதம் 50 வார சேமிப்பு திட்டம், கட்டின தொகை மற்றும் வட்டியை சேர்த்து 2022 டிசம்பர் கிறிஸ்துமஸ் Gathering அன்று பொருட்கள் வாங்கலாம். இத்திட்டத்தில் மாதர் ஜோதிஸ் தாய்மார்கள் பங்கேற்கலாம். இவ்விழாவில் 60 ஆனிமேட்டாஸ் கலந்து கொண்டனர். சுமார் 4 மணியளவில் விழா நிறைவுற்றது.

### *திருமண ஆயத்தப் பயிற்சி*

திருமண ஆயத்தப் பயிற்சியானது டிசம்பர் 11 மற்றும் 12 ஆகிய தேதிகளில் இல்வாழ்வு இயக்க அலுவலகத்தில் வைத்து நடைபெற்றது. இப்பயிற்சியில் 13 இளையோர்கள் கலந்துகொண்டனர். அடுத்த திருமண ஆயத்தப் பயிற்சி வகுப்புனாது ஜனவரி 7 மற்றும் 8 தேதிகளில் இல்வாழ்வு இயக்க அலுவலகத்தில் வைத்து நடைபெறும்.

அருட்தந்தை ஜிம்மி
தெக்கேகடுமத்தில்
இயக்குநர்,
இல்வாழ்வு இயக்கம்




# வின்செண்ட்-தே-பவுல் சபை

***நினைவேந்தல் நிகழ்வு***

தக்கலை மத்திய சபையின் துணைத்தலைவரும், தேசிய சபையின் துணைத்தலைவருமாகிய திரு. சவுந்தரராஜ் அவர்களுக்கான நினைவேந்தல் திருப்பலி, நித்திரவிளை வட்டார சபையின் ஆன்மீக இயக்குநர் பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம் அவர்கள் தலைமையில் 12.12.2021 அன்று பிற்பகல் 2 மணிக்கு நித்திரவிளை ஜெயமாதா மறைவட்ட ஆலயத்தில் வைத்து நடைபெற்றது. திருப்பலிக்குப் பின்னர் 3.30 மணிக்கு வட்டார சபை கூட்டமும் கிறிஸ்மஸ் விழாவும் நடைபெற்றது. கூட்டத்திற்கு ஆன்மீக இயக்குநர் அவர்கள் தலைமை தாங்கினார்கள். வட்டார சபையின் முன்னால் தலைவர் திரு. வின்சென்ட் ராஜ் அவர்களும் மத்திய சபையின் உறுப்பினர் திரு. எட்வின்சன் அவர்களும் சிறப்பு விருந்தினர்களாகப் பங்கேற்றனர்.

வட்டாரச் சபைத் தலைவர் திரு. ஜோஸ் அனைவரையும் வரவேற்றார். பின்னர் செயலர் அறிக்கையை வாசித்து அவையின் முன் சமர்ப்பித்தார்கள்.

ஆன்மீக இயக்குநர் தமது தலைவர் உரையின் போது, கிறிஸ்து பிறப்பு மறப்பதற்கு உரியது அல்ல; மாறாக போற்றுதற்கு உரியது என்றார். மனிதரால் செய்ய இயலாதவற்றை கடவுளால் செய்ய இயலும் என்னும் இறைவார்த்தையை வாழ்வில் ஏற்கும் பக்குவம் அன்னை மரியாவுக்கு இருந்தது. நமக்கு ஏற்படும் துன்பங்கள் பிறருக்கு மகிழ்ச்சியை கொடுக்க நேரிடும். வாழ்வில் எது வரினும் அதை கடவுளின் திட்டமாக ஏற்று வாழும் மனத்திடம் அனைவரும் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று அவர் வாழ்த்தினார்.

மத்திய சபையின் கல்வி திட்ட அலுவலர் திரு. வின்சென்ட்ராஜ் அவர்கள் தமது உரையில் மறைந்த வின்செந்தியர் திரு. சவுந்தர்ராஜ் அவர்களின் சிறப்பு பற்றியும், அவரது வின்செந்தியப் பணிகளைப் பற்றியும் எடுத்துக் கூறினார். அவர் தம் உரையில், சகோதரர் அவர்கள் துன்பங்களின் மத்தியில் இன்பம் கண்டு திடமனதோடு உழைத்தார் எனவும், அவர் திருமுழுக்கு யோவானைப் போல தாம் பெற்ற அழைத்தலுக்கு ஏற்ப வாழ்ந்தார் என்றும் கூறினார். மேலும், அவரின் வாழ்விலிருந்து தூண்டுதல் பெற்றவர்களாக, நமது அழைப்பை முழுமையாக வாழ வேண்டும் என்று அனைவருக்கும் அழைப்பு விடுத்தார்.

மத்திய சபையின் வெளிநாட்டு கடிதத்தொடர்பாளர் திரு. எட்வின்சன் அவர்கள், சகோ. சவுந்தர்ராஜ் அவர்களின் வாழ்வானது மறைமாவட்டம் சார்ந்ததாக

அமைந்தது என்றும், ஆயர் இல்லத்திலிருந்து இறைவனடி சேர்ந்த பயணமாக அவரது இறுதி நொடிகள் அமைந்தது என்றும் கூறினார். மேலும் அவர் தம் உரையில், நாளை என்பது நம் கையில் இல்லை. அன்னை மரியா கபிரியேல் வானதூதரின் வாழ்த்துரைக்கு பதிலுரைத்து அதன்படி பிறரன்புப் பணி செய்தவர். சிக்கல்கள் வரும் போது, அதை எதிர்கொண்டு வாழ திடம் கொள்வோம். வின்செந்திய உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் கடமை உணர்வோடு உண்மையான வின்செந்தியர்களாக வாழ அழைக்கப்பட்டிருக்கிறோம். அதை ஏற்று வாழ்வில் செயல்படுவோம். கடித்தொடர்புகளை வலுப்படுத்தி கிடைத்த தாலந்துகளை திட்டமிட்டு பயன்படுத்துவோம். கிறிஸ்துவின் பிறப்பை ஏழைகளில் காண்போம் என்று கூறினார்.

வட்டாரச் சபைத் தலைவர் சகோ. ஜோஸ் அவர்கள் சபையின் வளர்ச்சிக்காக சில அறிவுரைகள் கூறினார்கள். பின்பு சகோதரி டெய்சி அனைவருக்கும் நன்றி கூற இறுதி ஜெபம் மற்றும் ஆன்மீக இயக்குநரின் ஆசியுடன் கூட்டம் இனிதே நிறைவுற்றது.

தகவல் சேகரிப்பு

D. ஷாஜி

---

# தென்காசி திருத்தொண்டுத் தளம் வெள்ளிவிழா தொடக்கவிழா

1997 ஆம் ஆண்டு, அருட்தந்தை மாத்யூ குழிஞ்ஞாலில் மற்றும் அருட்தந்தை பீட்டர் கிழக்கேல் ஆகியோரின் முயற்சியால் தொடங்கப்பட்ட செங்கோட்டை மிஷனாக அறியப்பட்ட தென்காசி திருத்தொண்டு தளம் 2022 ஆம் ஆண்டில் வெள்ளிவிழாவைக் காண இருக்கிறது. அதன் தொடக்க விழாவானது 19.12.2021 அன்று புளியரை சிறுமலர் ஆலயத்தில் ஆயர் தலைமையில் திருப்பலியுடன் ஆரம்பமானது. திருப்பலிக்குப் பின்னர் பொதுக்கூட்டமும் நடைபெற்றது. தக்கலை மறைமாவட்டத்திலிருந்து 50 பேர் பங்கேற்றனர். நிகழ்வுகளை அருட்தந்தை ஜிஜி கோயிப்புறம் அவர்கள், அருட்தந்தை செபி அவர்களுடன் இணைந்து ஏற்பாடு செய்திருந்தார்.

# கன்னியாகுமரி சமூக சேவை சங்கம்

***JULE 2021***

தக்கலை மறைமாவட்டத்திலுள்ள பொருளாதாரத்தில் பின்தங்கிய மாணவர்களுக்கு ஆங்கில புலமையை வளர்க்கக் கூடிய பயிற்சி அளித்து வருவது Educare திட்டம் ஆகும். இந்த மாணவர்களுக்கான கிறிஸ்துமஸ் விழா "JULE 2021" என்ற பெயரில் KKSSS அரங்கத்தில் வைத்து டிசம்பர் 19 தேதி KKSSS இயக்குநர் தந்தை. கல்லூரி முதல்வர் முனைவர். ஐஸ்டின் அவர்கள் கலந்து கொண்டு உரையாற்றும் போது, தமிழ்நாட்டில் அதிகம் படித்தவர்கள் உள்ள மாவட்டம் குமரி மாவட்டம், ஆனால் வேலை வாய்ப்பு பொறுவதில் மிகவும் பின்தங்கி உள்ளது. ஏழை மாணவர்களின் ஆங்கில புலமையை அதிகரிக்க Educare திட்டம் மிகவும் பயனுள்ளது, அவர்கள் வாழ்வு உயர



தோமஸ் பூவத்துமூட்டில் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இதில் சிறப்பு விருந்தினராக முளகுமுடு, இரண்டாம் ஜான்பால் கல்வியல் இது பயனுள்ளதாக அமைந்துள்ளது. எந்த ஒருவரும் கடவுளின் இரக்கத்திலிருந்து புறந்தள்ளப்பட்டவர் அல்ல. இந்த மாணவச் செல்வங்களோடு

கிறிஸ்துமஸ் கொண்டாடுவதில் பெரும் மகிழ்ச்சி அடைவதாக கூறினார். நிகழ்வுக்கு இடையிடையே கலைநிகழச்சிகள் நடைபெற்றன. Educare மாணவர்களுக்கு கிறிஸ்துமஸ் பரிசினை KKSSS இயக்குநர் தந்தை அவர்கள் வழங்கினார்கள். இதில் சுமார் 100 க்கும் மேற்பட்ட மாணவர்கள், பெற்றோர், அலுவலக பணியாளர்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

### *மருத்துவ முகாம்*

கன்னியாகுமரி சமூக சேவை சங்கம் மற்றும் முன்சிறை ATSVS மருத்துவக்கல்லூரி இணைந்து நடத்திய சித்த மருத்துவ முகாம் முக்கூட்டுக்கல், திருகுடும்ப ஆலயத்தில் வைத்து KKSSS இயக்குநர் தந்தை. தோமஸ் பூவத்துமூட்டில் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இதில் ATSVS சித்த மருத்துவ கல்லூரியின் பேராசிரியர் மருத்துவர் ஜெயந்தி மற்றும் பிரதிபா அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார்கள். இதில் ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என 198 பேர் கலந்து கொண்டனர். அவர்களுக்கு இலவச பரிசோதனை செய்து இலவச மருந்தும் அளிக்கப்பட்டது இதில் 2 மருத்துவர்கள் உட்பட 20 பயிற்சி மருத்துவர்களும் கலந்து கொண்டனர். தொடர்ந்து, பள்ளி மாணவர்களுக்கு

“சித்த மருத்துவமும் இயற்கை வேளாண்மையும்” என்ற தலைப்பில் ATSVS சித்த மருத்துவ கல்லூரி பேரா. மருத்துவர் ஜெயந்தி சித்த மருத்துவம் மற்றும் இயற்கை வேளாண்மை பற்றிய கருத்துக்களை பகிர்ந்து கொண்டார். ஆசிரியர்கள் மாணவர்கள் உட்பட 45 நபர்கள் கலந்து கொண்டனர்.



### கிறிஸ்துமஸ்

கன்னியாகுமரி சமூக சேவை சங்கத்தின் பணியாளர்களுக்கான கிறிஸ்மஸ் கொண்டாட்டம் டிசம்பர் 23 தேதி இயக்குநர் தந்தை. தோமஸ் பூவத்துமூட்டில் அவர்கள் தலைமையில் KKSSS வளாகத்தில் நடைபெற்றது. தந்தையவர்களின் கிறிஸ்துமஸ் செய்தியில் கிறிஸ்துமஸ், உலகம் முழுவதும் கொண்டாடும் உன்னதமான நிகழ்வு. இது கிறிஸ்தவர்களுக்கு மட்டுமல்ல, உலகின் அனைத்து மக்களுக்கும் அன்பையும் மகிழ்ச்சியையும் கொண்டு வருகிறது. இந்தியாவில் கிறிஸ்துமஸ் விழா சிறப்பாக குமரிமாவட்டத்தில் கொண்டாடப்படுகிறது. சமூகத்தின் நன்மைக்காக சேவை செய்வதன் மூலம் அனைவரையும் மீட்பதே கிறிஸ்மஸ் நோக்கம். நீங்கள் மற்றொருவருக்கு உதவும்போதும் இயேசு உங்கள் இதய கூட்டில் பிறக்கும் போதும் இந்த கிறிஸ்துமஸ் மகிழ்ச்சியான கிறிஸ்துமசாக மாறும் என்று கூறினார். ஆலோசகர் முனைவர் சத்திய தாஸ் அவர்கள் கிறிஸ்துமஸ் வாழ்த்து செய்தி வழங்கினார்கள். இடையிடையே அலுவலக பணியாளர்களின் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன. இதில் பணியாளர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.

### நினைவு திருப்பலி

கன்னியாகுமரி சமூக சேவை சங்கத்தின் முன்னாள் இயக்குநர் பேரருட்தந்தை தோமஸ் தெக்கேல் அவர்களின் ஒன்பதாம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு, கன்னியாகுமரி சமூக சேவை சங்கத்தின் சார்பில் கல்லுவிளை, புனித அன்னைத் தெரசா ஆலயத்தில் வைத்து அருட்தந்தை. தோமஸ் பூவத்துமூட்டில் தலைமையில் நினைவு திருப்பலி நடைபெற்றது. அப்போது தந்தை அவர்கள் பேசும்போது ஏழை மக்களுக்காகவே அருட்தந்தை தோமஸ் தெக்கேல் தனது இறுதி மூச்சு வரை உழைத்தார். தக்கலை மறைமாவட்டத்திற்கு மட்டுமல்லாது ஒட்டுமொத்த குமரிமாவட்ட நலனுக்காவே வாழ்ந்து மறைந்தவர் என உருக்கத்துடன் நினைவுகூர்ந்தார். இந்நிகழ்ச்சியில் KKSSS அலுவலகப்பணியாளர்கள், தக்கலை நிதி லிமிடெட் பணியாளர்கள், களப்பணியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### மருத்துவ உபகரணங்கள்

கன்னியாகுமரி சமூக சேவை சங்கம் குமரி மாவட்டத்தில் மருத்துவம் சார்ந்தும், சாராமலும் பல உதவிகளை செய்து வருகின்றது. இதில் காரிதாஸ் என்ற உலகளாவிய தொண்டு நிறுவனத்தோடு இணைந்து Face vapour, Thermometer உள்ளிட்ட 6 மருத்துவ உபகரணம் அடங்கிய் கிட் கொரோனா & T.B பாதித்த நபர்கள், ஆசிரியர்கள், தன்னார்வலர்கள் உட்பட 470 நபர்களுக்கு 34 மையங்களில் மைய இயக்குநர் அருட்தந்தையர்களால் வழங்கப்பட்டன.

அருட்தந்தை எபின் பூவத்துமூட்டில்

செயலர்

# மறைமாவட்ட மக்கள் தொடர்பு அலுவலகம் சார்பில் கிறிஸ்து பிறப்பு விழா

மறைமாவட்ட நலம் விரும்புவோரின் கூட்டமு மறைமாவட்ட ஆயரின் தலைமையில் கிறிஸ்து பிறப்பு விழா கொண்டாட்டமாக 20.12.2021 திங்கள் மாலை 6 மணிக்கு தக்கலை சங்கமத்தில் வைத்து நடந்தது.

அமைப்பின் இயக்குநரும் அல்போன்சாக கலைக்கல்லூரி தாளாளருமான பேரருட்தந்தை ஆன்டணி சோஸ் அவர்கள் அனைவரையும் வரவேற்றார். சமூக சேவகரும் தக்கலை நண்பர்கள் இயக்க உறுப்பினருமான பத்மனாபபுரம் திரு. வினோத் மறைமாவட்டச் செயல்பாடுகளைப் பற்றி பகிர்ந்து வாழ்த்துரை வழங்கினார். எழுத்தாளரும் முன்னாள் கூடுதல் ஆட்சியருமான திரு. தக்கலை ஹலீமா தக்கலை நண்ப்ரகள் இயக்க செயல்பாடுகளையும், முன்னெடுக்க வேம்டிய செயல் திட்டங்களையும் குறித்து விளக்கிப் பேசினார். தலைமையுரை நிகழ்த்திய மேதகு ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB அவர்கள் தமது உரையில் மறைமாவட்ட வெள்ளிவிழா நிகழ்வுகள், தக்கலை நண்ப்ரகள் இயக்க செயல்பாடுகள், மறைமாவட்ட வளர்ச்சி மற்றும் இலக்கு குறித்து விரிவாகப் பேசி அதற்காக உழைத்த ஒத்துழைத்த அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்கள்.

கூட்டத்தின் தொடக்கத்தில், மறைந்த மறைமாவட்ட பொதுநிலையினர் பேரவைச் செயலர் திரு. சவுந்தர்ராஜ் அவருக்கு நினைவு அஞ்சலி செலுத்தப்பட்டது. அதைத் தொடர்ந்து திரு. எட்வின்சன் அவர்கள் விருந்தினர் அனைவரையும் அவையின் கண் அறிமுகம் செய்து வைத்தார். ஆயர் அவர்கள் நினைவுப் பரிசு வழங்கினார். விருந்தினர் புடைசூன கிறிஸ்மஸ் கொண்டாடப்பட்டது. பரைக்கோடு கிறிஸ்து அரசர் ஆலய பெண்கள் கிறிஸ்து பிறப்பு விழாப் பாடல் பாடினர். நிறைவாக திரு. சோணிக் ரீகன் அனைவருக்கும் நன்ரி கூற விழா இனிதே நிறைவுற்றது.



# ஆயர் இல்ல அயலாரோடு இணைந்து கிறிஸ்மஸ் கொண்டாட்டம்

தக்கலை ஆயர் இல்ல அயலாரோடான நான்காம் ஆண்டு கிறிஸ்மஸ் விழா 23.12.2021 அன்று வியாழன் மாலை 6.30 மணிக்கு மேதகு ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB தலைமையில் நடைபெற்றது. ஒருங்கிணைப்பாளர் அருட்தந்தை அஜின் ஜோஸ் அனைவரையும் வரவேற்றார். திரு. எட்வின்சன் ஆண்டறிக்கை சமர்ப்பித்தார். CMC மற்றும் CTC துறவற அருட்சோகதரிகளின் பாடலும் புனித மரியன்னை ஆலய குழந்தைகளின் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. அருகாமையில் வசித்து வந்த திரு. ஐயப்பன் செட்டியார் மறைவிற்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.




திரு. கிர்ஷ்ணன் நாயர் வாழ்த்துரை வழங்கினார். 2019 ஆம் ஆண்டு நிகழ்வை திருமதி வினோலி காட்சிப்படுத்தினார். தலமையுரையில் ஆயர் அவர்கள் நல்ல சமாரியன் உவமையைப் கூறி நல்ல அயலானாக வாழவே இயேசு நம்மை அழைக்கிறார். அவரது பிறப்பு தரும் செய்தியும் அதுவே என்றார். நிறைவாக அருட்சகோதரி சூனா ரோஸ் CMC அவர்கள் நன்றி கூறினார். சுமார் 35 குடும்பங்கள் அழைக்கப்பட்டு 28 குடும்பங்கள் விழாவில் பங்கெடுத்துச் சிறப்பித்தன. நிகழ்வின் ஏற்பாடுகளை பேரருட்தந்தை ஜோண்சிலால் மற்றஉம் அருட்சகோதரி எமிலி CMC ஆகியோர் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர்.

# மறைமாவட்டச் செய்திகள்

## கிறிஸ்தவ ஐக்கியப் பேரவை சார்பில் கிறிஸ்மஸ் கொண்டாட்டம்


குமரி மாவட்ட கிறிஸ்தவ ஐக்கியப் பேரவை சார்பில் அழகப்பபுரம் என்னும் இடத்தில் வைத்து டிசம்பர் 4, 2021 அன்று கிறிஸ்மஸ் கொண்டாட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு ஐக்கியப் பேரவைத் தலைவரும் கோட்டாறு மறைமாவட்ட ஆயருமான மேதகு நசரேன் சூசை அவர்கள் தலைமை தாங்கினார்கள். அவர் பேசுகையில் அடுத்து ஆண்டுக்கான குமரி கிறிஸ்தவ ஐக்கியப் பேரவையின் செயல்பாடுகள் பற்றி சுருக்கமாக கூறினார். பங்கேற்ற வெவ்வேறு தலைவர்கள் கிறிஸ்மஸ் செய்தி பகிர்ந்து கொண்டனர்.

## வெள்ளிவிழா கொண்டாட்டங்களுக்கு உதவிய பொதுநிலையினருக்கு நன்றி

டிசம்பர் 4, 2021 அன்று மறைமாவட்ட வெள்ளிவிழா சிறப்பு நிகழ்வுகளிலும், நூல்கள் வெளியீடுகளிலும் உதவியவர்களை பாராட்டும் பொருட்டு நிகழ்வு ஒன்று தக்கலை சங்கமத்தில் வைத்து ஏற்பாடு செய்யப்பட்டது. அதில் நூல்கள் வெளிவர உதவிய அனைவருக்கும் பாராட்டுகளும் நன்றிகளும் ஆயர் அவர்களால் தெரிவிக்கப்பட்டது. அனைவருக்கும் மதிய உணவு அளிக்கப்பட்டது.

## புனித யோசேப்பு ஆண்டு நிறைவு

உலகளாவிய திருச்சபையின் பாதுகாவலராக புனித யோசேப்பு அறிவிக்கப்பட்டதன் 150 ஆம் ஆண்டை நினைவு கூரும் விதத்தில், 2021 ஆம் ஆண்டை திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் புனித



யோசேப்பு ஆண்டாக அறிவித்தார். உலகளாவிய அளவில் டிசம்பர் 8 அன்று நிறைவு அனுசரிக்கப்பட்டது. நமது மறைமாவட்டத்தில் அதன் நிறைவு 12.12.2021 அன்று அனுசரிக்கப்பட்டது. ஆயர் அவர்கள் 8 ஆம் தேதி தெற்றிவிளை புனித மிக்கேல் அதிதூதர் ஆலயத்தில் திருப்பலி நிறைவேற்றி தூய யோசேப்பு ஆண்டை நிறைவு செய்தார்.

### ▶ மதுரை கிராமம் சந்திப்பு

திருத்தொண்டுப் பணியாளர்கள் மதுரைப் பகுதியில் பணியாற்றி வருகிறார்கள். ஆரியூர் மற்றும் விளாத்திக்குளம் எனும் இரு




கிராமங்களை ஆயர் அவர்கள் டிசம்பர் 11, 2021 அன்று சந்தித்தார். ஆரியூர் கிராமத்தில் SABS அருட்சகோதரிகள் பணியாற்றுகின்றனர். விளாத்திக்குளம் கிராமத்தில் அருட்தந்தை அனில் ராஜ் மற்றும் திருத்தொண்டர் மகேஷ் ஆகியோர் பணியாற்றுகின்றனர். இக்கிராமங்களில் மாலைக்கல்வி நடத்தப்படுகிறது.

### ▶ சாவறா திருத்தொண்டு தளத்தில் கிறிஸ்மஸ் கொண்டாட்டம்

12.12.2021 அன்று ஆயர் அவர்கள் மதுரையில் CMI அருட்தந்தையர்களால்



மேய்ப்புப் பணி மேற்கொள்ளப்பட்டு வரும் சாவறா இல்லத்தில் திருப்பலி நிறைவேற்றி கிறிஸ்மஸ் கொண்டாட்டத்திலும் பங்கேற்றார். இங்கு கிறிஸ்தவ சமூகம் செயல்பட்டு வருகிறது.

- **விரிவாக்கப்பட்டப் பகுதியில் பணியாற்றும் திருத்தொண்டுப் பணியாளர்களுடன் சந்திப்பு**

விரிவாக்கப்பட்டப் பகுதிகளில் பணியாற்றும் திருத்தொண்டுப் பணியாளர்கள் *12.12.2021* அன்று கிறிஸ்மஸ் கொண்டாட்டங்களுக்காக மதுரை தீபகத்தில் ஒன்றாக கூடி வந்தனர். அவர்கள் தங்கள் திருத்தொண்டுத் தள அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டனர். ஆயர் அவர்கள் நிகழ்வில் பங்கேற்றார்.

- **பல்வேறு நிறுவனங்களின் தலைவர்களுடன் கிறிஸ்மஸ் கொண்டாட்டம்**

*13.12.2021* அன்று மறைமாவட்டத்தின் கீழ் இயங்கி வரும் பல்வேறு




நிறுவனங்களின் தலைவர்கள் கூடி வந்து ஆயர் தலைமையில் கிறிஸ்மஸ் விழாவைச் சிறப்பித்தனர். பள்ளிக்கூடங்கள், தொழில் நிறுவனங்கள், பிறரன்பு இல்லங்கள் ஆகியவற்றின் தலைவர்கள் இதில் பங்கேற்றனர்.

- **மனநலம் குன்றியோருக்கான இல்லத்திற்கான அடிக்கல் மந்திரிப்பு**

திருநெல்வேலி பகுதியில் விஜயநாராயணபுரம் என்னும் இடத்தில்,

மனநலம் குன்றியவர்களுக்கான இல்லம் அமைக்கும் பொருட்டு 14.12.2021 அன்று அடிக்கல் மந்திரிக்கப்பட்டது. திருநெல்வேலி பகுதியில் பணியாற்றும் தந்தையர்களும் அருட்சகோதரிகளும் இதில் பங்கேற்றனர். ஆயர் அவர்கள் அடிக்கல்லை மந்திரித்தார்.

### அருட்சகோதரி மேரி சேவியர் SDS மறைவு

கோட்டாறு, பாளையங்கோட்டை மற்றும் தக்கலை மறைமவட்டங்களில் பணியாற்றிய அருட்சகோதரி மேரி சேவியர் SDS அவர்கள் 13.12.2021 அன்று இறையடி சேர்ந்தார்கள். அவரின் நல்லடக்கச் சடங்குகள் மஞ்சாலுமூடு SDS கன்னியர் இல்லத்தில் வைத்து நடைபெற்றது. ஆயர் அவர்கள் திருவழிபாடுகளுக்கும் தலைமையேற்றார்கள்.

### துறவற சங்கத்துடன் கிறிஸ்மஸ் விழா

CRI (Conference of Religious India) வின் தக்கலை சார்பான கிறிஸ்மஸ் கூட்டம் 18.12.2021 அன்று நடத்தப்பட்டது. நமது



மறைமாவட்டத்தில் பணியாற்றும் வெவ்வேறு துறவற சபைகளைச் சார்ந்த உறுப்பினர்கள் இக்கூட்டத்தில் 150 க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர். நிகழ்வானது கழுந்திட்டை நம்பிக்கை ஆலயத்தில் வைத்து, திரு இருதய சபை அருட்சகோதரிகளால் ஏற்பாடு

செய்யப்பட்டது.

## அருட்பணியாளர்களுக்கான கிறிஸ்மஸ் கொண்டாட்டம்

*21.12.2022* அன்று மறைமாவட்டத்தில் பணியாற்றும் குருக்களுக்கான



கிறிஸ்மஸ் கொண்டாட்டமானது மாலை 5 மணி தொடங்கி தக்கலை சங்கமத்தில் வைத்து நடைபெற்றது. இரவு உணவுடன் கூட்டம் நிறைவுற்றது.

## SEEDS உறுப்பினர்களின் கிறிஸ்மஸ் கொண்டாட்டம்

எதிர்கால அருட்பணியாளர்களை உருவாக்குவதற்காக பொருளாதார



உதவி செய்கின்றவர்களின் கிறிஸ்மஸ் கொண்டாட்டமானது 22.12.2021 அன்று முக்கூட்டுக்கல் இளங்குருமடத்தில் வைத்து நடைபெற்றது. மஞ்சாலுமூடு மறைவட்டத்தைச் சேர்ந்த குருக்களுக்கும் அருட்சகோதரிகளும் கூட்டத்திற்கு அழைக்கப்பட்டிருந்தனர். இந்நிகழ்வில் பொருளுதவி செய்யும் 30 குடும்பங்கள் பங்கேற்றனர். ஆயர் அவர்கள் தலைமையில் நடந்த கூட்டத்திற்கான ஏற்பாடுகளை இளங்குருமட அதிபர் அருட்தந்தை ஜோஷி குளத்துங்கல் அவர்கள் ஏற்பாடு செய்தார்கள்.

## கைசாலவிளை புனித சவேரியார் புத்தாலயம் அர்ச்சிப்பு

2016 ஆகஸ்ட் மாதம் 15 ஆம் தேதி, கைசாலவிளை புனித சவேரியார் பங்கில் புத்தாலயம் கட்டுவதற்கான அடிக்கல் நாட்டப்பட்டது. அருட்தந்தை லூக்கா கொல்லம்பறம்பில் அவர்கள் பங்குத்தந்தையாக



பணியாற்றி வந்தார். அவர் இடம் மாற்றம் ஆன பின் அதன் பணிகளை அருட்தந்தை தோமஸ் தெக்கேத்தல CMI அவர்கள் மேற்கொண்டார்கள். பணிகள் நிறைவடைந்த நிலையில் அதன் அர்ச்சிப்பானது 30.12.2021 அன்று ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்களால், CMI திருவனந்தபுரம் மாகணத் துணைதலைவர் அருட்தந்தை சோணி மற்றும் மறைமாவட்ட குருகுல முதல்வர்

முன்னிலையில் நடைபெற்றது.

# இதர செய்திகள்

- சீரோ மலபார் மறைக்கல்வி நிலையமும் திருத்தொண்டுப் பணிகளுக்கான அலுவலகமும் இணைந்து திருத்தொண்டு குறித்த மாபெரும் வினாடி வினா போட்டியை 9.1.2022 அன்று நடத்தவிருக்கிறது. இதில் நமது மறைமாவட்டத்தைச் சார்ந்தவர்களும் பங்கேற்பதற்கான ஏற்பாடுகளை நற்செய்தி நிலையம் மேற்கொள்கிறது.

- 'கூட்டொருங்கியக்க திரு அவையாக' என்னும் மையக்கருத்தை அடிப்படையாகக் கொண்ட ஆயர் மாமன்றத்திற்கான தயாரிப்பு ஆவணத்தின் மீதான கருத்தரங்குகள் மறைமாவட்ட அளவில் ஏற்பாடு செய்யப்பட்டு 2022 ஜனவரி மாதத்தில் நடத்தப்பட இருக்கின்றன.

- இடுக்கி மாகாணத்தைச் சார்ந்த FCC அருட்சகோதரிகள் சின்னமனூர் என்னும் இடத்தில் எழுப்பி வந்த இல்லத்தின் பணிகள் நிறைவடைந்திருக்கின்றன. அதன் மந்திரிப்பு 22.02.2022 அன்று நடத்தப்படும்.

- தென்காசி பகுதிகளில் பணியாற்றி வரும் MCBS அருட்தந்தையர்கள் தங்கள் பணியின் 25 ஆண்டுகளை நிறைவு செய்வதை முன்னிட்டு, நிறைவுத் திருப்பலியும் கொண்டாட்டமும் 18.01.2022 அன்று நடைபெறும்.

- இந்திய அரசின் ஒத்துழைப்புடன், மஞ்சாலுமூடு ஆலய வளாகத்தில் தொடங்கப்பட இருக்கும் வேலைத்திறன் வளர் பயிற்சி நிலையத்தின் தொடக்கவிழா ஜனவரி 5 அன்று நடைபெறும்.

- சீரோ மலபார் ஆயர் பேரவையானது 2022 ஜனவரி 7 முதல் 15 ஆம் தேதி வரை காக்கனாடு செயின்ட தோமஸ் மவுண்டில் வைத்து நடைபெறுகிறது.

- கைசாலவிளையைச் சேர்ந்த திருத்தொண்டர் லிபின் கோட்டப்புறம் அவர்களின் குருத்துவ அருட்பொழிவு 27.12.2021 அன்று செத்திப்புழா CMI இல்லத்தில் வைத்து நடைபெற்றது. CMI சபையைச் சேர்ந்த இவரின் முதல் திருப்பலி கைசாலவிளை பங்கில் வைத்து 31.12.2021 அன்று நடைபெற்றது.

# மறைவட்டச் செய்திகள்

## நித்திரவிளை

### ▶ புனித ஜார்ஜியார் திருத்தலம் முஞ்சிறை

டிசம்பர் 16 ஆம் தேதி, கிறிஸ்து பிறப்புக்கு ஆயத்தமாக ஒப்புரவு வழிபாடு மற்றும் சிறப்பு நற்கருணை ஆராதனை நடைபெற்றது. எல்லா மக்களும் ஒப்புரவு வழிபாட்டில் பங்குபெற்று திவ்யநற்கருணைப் பெற்றுக் கொள்ளத் தயாராயினர்.

24 ஆம் தேதி மாலை 6 மணிக்கு குடில் திறப்பு விழாவும் அவ்விழாவில் 30 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளும் வழங்கப்பட்டன. அருட்தந்தை ரோபின் ஜோஸ் அவர்கள்,



பங்குத்தந்தை ஜோமோன் அவர்கள் முன்னிலையில் குடில் திறந்து வைத்து கிறிஸ்துமஸ் வாழ்த்துச் செய்தி வழங்கினார். பின்னர் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன. பங்குத்தந்தை ஜோமோன், திரு. தனசிங், திரு சுகுமாரன், திரு. வின்சென்ட்ராஜ் ஆகியோரும் நமது அருட்சகோதரிகளும் வாழ்த்துக் கூறி நலத்திட்டங்களை வழங்கினர்.

பின்பு இரவு 11 மணிக்கு கிறிஸ்து பிறப்பு விழா திருப்பலியும் பவனியும் நடைபெற்றது. பங்குதந்தையர்களோடு இணைந்து அருட்தந்தை ரோபின் அவர்கள் திருப்பலி நிறைவேற்றினார்.

அவர் சிறந்ததொரு மறையுரையாற்றினார். இறைமகன் ஈசோவின் பிறப்பை மையப்படுத்தி நிகழ்வுகள் அனைத்தும் நடந்தன. திருப்பலியின் நிறைவில் ஆலயத்திலிருந்து பவனி நடைபெற்றது. பின் கிறிஸ்துமஸ் கேக் வெட்டி அனைவருக்கும் வழங்கப்பட்டது. ஒருவருக்கொருவர் வாழ்த்துக்களைப் பகிர்ந்தனர்.

01.01.2022 அன்று காலை 5.30 மணிக்கு நன்றி ஆராதனையும் திருப்பலியும் நடைபெற்றது. அருட்தந்தையோடு இணைந்து பங்கு மக்கள் அனைவரும் திருப்பலி ஒப்புக்கொடுத்து செபித்து இறையாசீர் பெற்றனர்.

## புனித அமல மரியா ஆலயம்– சீனிவிளை

டிசம்பர் முதல் தேதி முதல் 25 நாட்கள் நோன்பு அனுசரிக்கப்பட்டது. 20 ஆம் தேதி முதல் 23 ஆம் தேதி வரை நான்கு நாட்கள் கிறிஸ்மஸ் பஜனை நடைபெற்றது.

24 ஆம் தேதி இரவு 8 மணிக்கு கிறிஸ்மஸ் மரவிழா குலுக்கல் நடைபெற்றது. எல்லா நபர்களுக்கும் சிறப்பு பரிசுகள் வழங்கப்பட்டன. இரவு 9 மணிக்கு திருப்பலியும் சிறப்பு வழிபாடுகளும் நடைபெற்றன. பின்னர் கேக் வெட்டி அனைவரும் கிறிஸ்மஸ் வாழ்த்துச் சொல்லி மகிழ்ந்தனர்.

31 ஆம் தேதி மாலை 6 மணிக்கு 1 மணி நேர ஆராதனையும் தொடர்ந்து புத்தாண்டு தின திருப்பலியும் நடைபெற்றது.

## புனித அந்தோணியார் ஆலயம் – வயலின்கரை

டிசம்பர் மாதம் 6 ஆம் தேதி முதல் 18 ஆம் தேதி வரை மிஷன்லீக் பிள்ளைகள் சார்பில் கிறிஸ்மஸ் பஜனை நடைபெற்றது. அந்நாட்களில் சுமார் 650 வீடுகள் சந்திக்கப்பட்டு கிறிஸ்துமஸ் வாழ்த்துகள் கூறப்பட்டு அவர்களுக்காக செபிக்கப்பட்டது.

24 ஆம் தேதி இரவு 11 மணிக்கு கிறிஸ்து பிறப்பு விழா திருப்பலியும் வழிபாடுகளும் நடைபெற்றன. திருப்பலிக்குப் பின்னர்

கிறிஸ்துமஸ் கேக் வெட்டி அனைவரும் பகிர்ந்துக் கொண்டனர். அதன் பின்னர் இளையோர் இயக்கம் சார்பாக மரவிழா குலுக்கல் நடைபெற்றது. பரிசுகளும் வழங்கப்பட்டன.

25 ஆம் தேதி 3 மணியளவில் வின்சென்ட் தே பவுல் சபை சார்பில் கிறிஸ்மஸ் விழா சிறப்பிக்கப்பட்டது. கேக் வெட்டப்பட்டு பகிரப்பட்டதோடு தத்துக் குடும்பங்களுக்கு உதவிகளும் வழங்கப்பட்டன.

31 ஆம் தேதி இரவு 10.30 மணி முதல் 11.30 வரை நற்கருணை ஆராதனையும் தொடர்ந்து புத்தாண்டுத் திருப்பலியும் நடைபெற்றது.

## களியல்

### ▶ புனித சூசையப்பர் ஆலயம்– காரோடு

டிசம்பர் 19, 2021 அன்று புனித யோசேப்பு ஆண்டு நிறைவு சிறப்பாக கொண்டாடப்பட்டது. திருப்பிலியின் போது, புனித யோசேப்பு







குடும்பங்களின் மாதிரி என்னும் தலைப்பில் சிறப்பு மறையுரை வழங்கப்பட்டது. திருப்பலியின் நிறைவில் குடும்பத்தலைவர்கள்

மெழுகு திரி ஏந்தி புனித யோசேப்பு சிறப்பு செபம் ஏறெடுத்தனர். பங்குத்தந்தை அஜீஷ் அவர்கள் அனைவருக்கும் சிறு பரிசுகளை வழங்கினார். நிறைவில் தலைவர்கள் கேக் வெட்டி அனைவருக்கும் கொடுத்து மகிழ்ந்தனர்.



டிசம்பர் 28 அன்று மழலையர் தினம் தினம் கோயிலில் வைத்து சிறப்பாக கொண்டாடப்பட்டது. குழந்தைகள் காணிக்கை பவனி நடத்தினர். அருட்தந்தை அனைவரையும் ஆசீர்வதித்தார். கேக் வெட்டப்பட்டு அனைவருக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டது.

அதே தினம் DNN இல் வைத்து மழலையர் தினம் சிறப்பாக கொண்டாடப்பட்டது. குழந்தைகள் விவிலிய வசனங்களை ஏந்தி பவனியாக வந்தனர். பரிசுகளும் இனிப்பும் வழங்கப்பட்டது.

## தூசைபுரம்

### ▶ கிறிஸ்து அரசர் ஆலயம் – பாலப்பள்ளம்

டிசம்பர் 1 முதல் 25 வரை நோன்பு கடைப்பிடிக்கப்பட்டது. அத்தோடு குழந்தை ஈசோவுக்கு காணிக்கப் பொருட்கள் சேகரிக்கவும் அறிவுறுத்தப்பட்டிருந்தது. அவற்றை 24 ஆம் தேதி இரவு திருப்பலியின் போது சமர்ப்பிக்கப்பட்டன.

உறவியம் சார்பில் 8 நாட்கள் பஜனை நடத்தப்பட்டது. ஒவ்வொரு நாளும் சுமார் 50 க்கும் மேற்பட்டோர் இணைந்து பஜனை சிறப்பித்தனர். பங்குத்தந்தை ஜாண்பால் அவர்களும் தினமும் பங்கெடுத்து குடும்பங்களுக்காக செபித்தார்.

25 நாட்களும் திருப்பலியில் பங்கெடுத்த மாணவ மாணவியருக்கு பரிசு வழங்கப்பட்டது. அதுபோல தினும் ஒரு வசனம் மனனம் செய்து இறுதியில் 25 வசனங்கள் ஒப்புவித்தவர்களுக்கு பரிசு வழங்கப்பட்டது.

குடும்பத்திற்கு ஒரு நட்சத்திரம் பங்கிற்கு வழங்க கேட்டுக்கொள்ளப்பட்டது. அதனடிப்படையில் கிடைத்த நட்சத்திரங்கள் ஆலயத்தை சுற்றி போடப்பட்டது.

8.12.2021 அன்று மாதாவின் அமலோற்பவ திருநாளை மரியாயின் சேனை உறுப்பினர்கள் தலைமையேற்று சிறப்பித்தனர்.

22.12.2021 வியாழன் காலை திருப்பலியினைத் தொடர்ந்து பங்கிலுள்ள அனைத்துக் குடும்பங்களுக்கும் கிறிஸ்மஸ் கேக் வழங்கப்பட்டது.

கிறிஸ்துப் பிறப்பு விழா: 24.12.2021 ஆலயத்தில் குடில் திறக்கப்பட்டது. இரவு கிறிஸ்மஸ் மரம் நடும் விழா உறவியங்கள் சார்பில் நடத்தப்பட்டது. இயற்கைப் பொருட்களைக் கொண்டு சிறப்பாக கிறிஸ்மஸ் மரம் நடப்பட்டது.

23.12.2021 பங்குப் பேரவை சார்பில் கிறிஸ்மஸ் கூட்டம் நடைபெற்றது.

## கிறிஸ்து அரசர் ஆலயம் – பாலப்பள்ளம்

*01.12.2021* அன்று முதல் ஆலயம் சார்பாக பஜனை நடைபெற்றது. மேலும் முதல் தேதி முதல் எட்டாம் தேதி வரை புனித யோசேப்பின் ஆண்டை முன்னிட்டு திருப்பலியும் அதைத் தொடர்ந்து தூய யோசேப்பின் சிறப்பு நவநள் செபமும் நடைபெற்றது.

எட்டாம் தேதி மாலை 5.30 மணிக்கு பங்குத்தந்தை பிரின்ஸ் மாலியில் அவர்கள் தலைமையில் ஆடம்பரத் திருப்பலியும் தூய யோசேப்பின் சிறப்பு நவநாள் செபமும் நடைபெர்றது. நிறைவில் அனைவருக்கும் இனிப்பு வழங்கப்பட்டது.

*22.12.2021* அன்று படுக்கை நோயாளிகளின் பாவசங்கீர்த்தனம் கேட்கப்பட்டதோடு தேவநற்கருணையும் பங்குத்தந்தையால் வழங்கப்பட்டது.

கிறிஸ்மஸ் இரவு திருப்பலி *24.12.2021* அன்று நடைபெற்றது. குழந்தை ஈசோவை சுமந்து சென்று பவனி, தீ காட்டுதல் போன்றவை திருப்பலியின் இடையே நடைபெற்றது. திருப்பலிக்குப் பின்னர் இளையோர்களின் கலைநிகழ்ச்சிகளும் அவர்கள் வெளியிட்ட குறும்படமும் திரையிடப்பட்டது. பின் அனைவருக்கும் கேக் வழங்கப்பட்டது. கிறிஸ்மஸ் மரம் போட்டியும் நடந்தது. போட்டிகளில் பங்கேற்றோருக்கு பரிசுகளும் வழங்கப்பட்டன. பஜனை பாடியவர்களுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன.

*28.12.2021* அன்று மாசில்லா குழந்தைகள் தினம் கொண்டாடப்பட்டது. காலை 6.30 மணிக்கு பங்குத்தந்தை பிரின்ஸ் தலைமையில் சிறப்புத் திருப்பலி நடைபெற்றது. திருப்பலிக்குப் பின்னர் குழந்தைகளின் தலைகளில் கைகளை வைத்து அருட்தந்தை அவர்கள் செபித்து ஆசிகளை வழங்கினார்.

**தகவல் சேகரிப்பு: திருமதி சினேக லதா | திருமதி ஹேமா**

## BISHOP'S ENGAGEMENTS December 2021

| DAT | DAY | TIME | EVENTS |
|---|---|---|---|
| 1 | Sat | 03.00 pm | Colachal: Kanikai Matha Church New Year Gathering |
| 2 | Sun | 02.30 pm<br>04.00 pm | Padanthalumoodu: Platinum Jubilee Inauguration of Mission league<br>Mulagumoodu : Mariyain Senai Centenary celebration, Holy Qurbana |
| 3 | Mon | | Bishops House |
| 4 | Tue | 07.00 am<br>10.00 am | TNBC- Health Care commission Secretaries meeting<br>Kalluvilai: Workshop on Synodality for priests and Religious - I |
| 5 | Wed | 10.00 am | Manjalumoodu: Inauguration of Skill Training center |
| 6 | Thu | 02.00 pm | Soosaipuram: College GB Meeting |
| 7-15 | | 06.00 pm | Kakanad: SyroMalabar Synod |
| 16 | Sun | 04.00 pm | Pallikonam; First Holy Communion |
| 17 | Mon | 06.00 pm | Madathattuvilai: Catholica Seva Sangam Platinum Jubilee |
| 18 | Tue | 10.00 am | Thenkasi: MCBS Silver Jubilee Celebration |
| 19 | Wed | 10.00 am | Synodality workshop for missionaries: Thenkasi and Extended territories |
| 20 | Thu | 04.00 pm | Nagarcoil: Marriage Holy Qurbana |
| 21 | Fri | 02.30 pm | Kayathar, Virudunagar: Mission visit |
| 22 | Sat | 02.30 pm | Theni: Blessing of FCC convent |

| DAT | DAY | TIME | EVENTS |
|---|---|---|---|
| 23 | Sun | 02.00 pm | Kunnuvilai: Family visit |
| 24 | Mon | 10.00 am | Meeting with Directors and Asstt. Directors of Departments |
| 25 | Tue | 06.00 pm | Minor Seminary visit |
| 26 | Wed | 07.00 am<br>10.00 am | Thuckalay: Holy Qurbana at CMC Provincial House<br>Curia meeting |
| 27 | Thu | 04.30 pm | Ampuri: Holy Qurbana |
| 28 | Fri | 07.00 am | Sangamam: Feast of Don Bosco |
| 29 | Sat | | Chennai: TNBC |
| 30 | Sun | | Chennai: TNBC |
| 31 | Mon | | Chennai: TNBC |

**Rev. Fr. Robin Jose, Bishop's Secretary**



Home for the Mentally Ill, Foundation Stone,
Vijayanarayanpuram, Nanguneri, 14.12.2021




Pre-Christmas Gathering, SEEDS,
St. Mary's Minor Seminary, Mukkuttukal, 22.12.2021



Meeting of Missionaries of Extended Territory, 12.12.2021



SMYM, NEW EXECUTIVES TAKING OFFICE AND CHRISTMAS CELEBRATION, KARODE -12.12.2021



NEW CHURCH CONSECRATION, KAISALAVILAI 30.12.2021

**For Private Circulation Only**

IRAI ARUL, The Official Organ of the Diocese of Thuckalay

Published by: Fr. Joseph Santhosh for the Diocese of Thuckalay,

Bishop's House, Post Box No. 12, Thuckalay - 629175

Printed at: Pulari Offset Press, Thuckalay 629175, Ph. 04651-252570